## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.11.2023 அனைத்து புனிதர்கள் விழா - திருப்பலி 02

02.11.2023 இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவு விழா - திருப்பலி 03

04.11.2023 புனித சார்லஸ் பொரோமெயோ - திருப்பலி 04

05.11.2023 பொதுக்காலத்தின் 31ஆம் ஞாயிறு - திருப்பலி 06

09.11.2023 இலாத்தரன் ஆலயம் நேர்ந்தளிப்பு - திருப்பலி 07

10.11.2023 புனித பெரிய லியோ திருத்தந்தை - திருப்பலி 08

12.11.2023 பொதுக்காலத்தின் 32ஆம் ஞாயிறு - திருப்பலி 09

13.11.2023 புனித ஆர்த்திமெதே சாத்தி விழா - திருப்பலி 11

15.11.2023 அருளாளர் மதலேன் மொராானோ - திருப்பலி 12

19.11.2023 பொதுக்காலத்தின் 33ஆம் ஞாயிறு - திருப்பலி 13

21.11.2023 கன்னி மரியாவை காணிக்கையாக்கும் விழா - திருப்பலி 14

24.11.2023 புனித ஆண்ட்ரு டுங் லாக் மறைசாட்சி - திருப்பலி 15

26.11.2023 கிறிஸ்து அரசர் பெருவிழா - திருப்பலி 16

30.11.2023 புனித அந்திரேயா திருத்தூதர் விழா 18


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


மரணம் என்பது முடிவன்று 19

புனித ஆர்த்திமெதே சாத்தி - வாழ்வு தரும் பாடம் 21

இயேசுவே உலகின் அரசர் 23

திருஅவைச் செய்திகள் 27

# பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.11.2023 அனைத்து புனிதர்கள் விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

I. திவெ. 7: 2-4, 9-14 II. 1யோவா. 3: 1-3 மத். 5: 1-12

ஆண்டவரில் அன்புறவுடன் வாழும் சகோதர சகோதரிகளே, இன்று நாம் அனைத்து புனிதர்களின் விழாவினைக் கொண்டாடுகின்றோம். கிறிஸ்துவால் அழைக்கப்பட்டு, அவரைப் பின்பற்றி அன்பு, அமைதி, இரக்கம், பகிர்தல், மன்னிப்பு, சகோதரத்துவம், நம்பிக்கை இவற்றிற்கு முன்மாதிரியான வாழ்வு வாழ்ந்த பலரில், ஒரு சிலரின் சான்றை மட்டும் எடுத்துக் கொண்டு திருஅவை புனிதராக அறிக்கையிட்டது. இன்றைய முதல் வாசகத்தில் சொல்லப்பட்டதுபோல எண்ணிலடங்காதோர், கடவுளின் அருளாலும், ஆட்டுக் குட்டியாம் கிறிஸ்துவாலும் மீட்படைந்திருக்கின்றனர். அவர்கள் கடவுளோடு இணைந்துள்ளனர், நிறைவு பெற்ற நீதிமான்களாக இருக்கின்றனர். "புனிதர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபொழுதும், இப்போது விண்ணகத்திலும் கடவுளோடும், கிறிஸ்துவோடும் இறையருளால் நிறைந்து இறையன்புக்கு சான்று பகர்பவர்களாக மூவொரு கடவுளின் புகழ்ச்சிக்காகவும், மகிமைக்காகவும், மாட்சிக்காகவும் கிறிஸ்துவில் ஒரே குடும்பமாய் திருஅவையை உருவாக்குகின்றனர்".

இவர்களோடு நாம் உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும், அவர்களின் பரிந்துரையையும், பாதுகாப்பையும், பெற்றால் மட்டும் போதாது, அவர்களின் வாழ்வு முறையையும் நாம் பின்பற்றி வாழவும், வளரவும் வேண்டும். இதையே இன்றைய விழாவும், 2ம் வாசகமும், நற்செய்தியும் அழுத்தமாக நமக்கு கற்பிக்கிறது. மனிதர்களை புனிதர்களாக மாற்றவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். நாம் இயேசுவுக்கு கீழ்ப்படிய கற்றுக்கொள்வோம். அந்த கீழ்ப்படிதல் எல்லா நலன்களையும் அருள்வாழ்வையும் நம்மிடம் கொண்டுவரும். அப்போது நாமும் இறையருள் பெற்ற புனிதராக வாழ முடியும் என்ற நம்பிக்கையில் அனைத்துப் புனிதர்களோடும் இணைந்து இப்பலியை ஒப்புக்கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மீட்பளிக்கும் இறைவா, உமது மீட்புப் பணியை தொடர்ந்து தம் சொல்லாலும் செயலாலும் நிறைவேற்றும் திருஅவையின் பணியாளர்களை உம் பாதம் படைக்கின்றோம். அவர்கள் உம்மோடு எப்போதும் அருள் வாழ்வில் நிலைத்திருந்து மக்களை நல்வழியில் நடத்தியருள வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிநடத்தும் இறைவா, எம் நாட்டுத் தலைவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை மத, இன, மொழி வேறுபாடின்றி மனித நேய வழியில் நடத்திச் செல்ல நீதியுள்ள, நேர்மையுள்ள இருதயத்தை அவர்களுக்கு வழங்கிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. மாற்றம் தரும் இறைவா, புனிதர்கள் அனைவரும் விண்ணகத்திலிருந்து வந்தவர்கள் அல்ல, மாறாக, மண்ணகத்தில் வாழும்பொழுதே விண்ணக வாழ்வை வாழ்ந்தவர்கள் என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். இங்கு கூடி செபிக்கும் நாங்கள், எங்களின் வாழ்வை இறைவனோடும், புனிதர்களோடும், இணைந்து வாழும் வாழ்வளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. விடுதலை நாயகனே எம் இறைவா, புனித வாழ்வில் தங்களை இணைத்துக் கொள்ள இயலாதவர்கள், பாவத்திற்கு அடிமைப்பட்டு விடுதலைக்காக ஏங்குவோர், ஏழ்மை, வறுமை, நோய், பிணி எனும் தடைகள் புனித வாழ்வுக்கு சவாலாக இருப்பதால், இவைகளைக் களைந்து விட்டு உம் புனித வாழ்வில் நாங்களும் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 02.11.2023 இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவு விழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. சாஞா. 3: 1-9 II. உரோ. 5: 5-11, 6: 3-9 யோவா. 6: 37-40

இயேசுவின் பிரியமான இறைச்சமூகமே, இறந்த ஆன்மாக்களின் திருநாளை கத்தோலிக்க திருஅவை ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் இரண்டாம் நாள் கொண்டாடி மகிழ்கிறது. இன்று இறந்தோரை நினைவுக் கூர்ந்து அவர்களுக்காக இறை வேண்டல் செய்கின்ற ஒரு சிறப்பான விழா. இதனைக் கல்லறைத் திருநாள் என்றும் அழைக்கின்றோம். வேதக் கலாப்பனைகளில் மறைச்சாட்சிகளாக இறந்தவர்களை ஒட்டு மொத்தமாக அடக்கம் செய்யும் பழக்கம் இருந்தது. அவர்களின் கல்லறைத் தோட்டங்கள் மக்கள் விரும்பிச் சந்திக்கும் இடங்களாக மாறின. கி.பி. 998ல் புனித ஓதிலோ என்பவர் தன்னுடைய குளுனி சபையினருக்கு இதனை அறிமுகப்படுத்தினார். தன்னுடைய துறவற மடத்தில் வாழ்ந்து இறந்தவர்களுக்காக சிறப்பான செபங்களைச் செய்ய இந்த விழாவை அறிமுகப்படுத்தினார். கி.பி. 13ம் நூற்றாண்டில் திருஅவை இந்த விழாவை உலகமெங்கும் கொண்டாடும்படி அனுமதி வழங்கியது. இறந்தவர்களுக்காக மன்றாடும் வழக்கம் மக்கபேயர் காலத்தில் இருந்தது என்பதை 2: 12,43-45ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறந்தோரை நினைவுக்கூர்ந்து அவர்கள் விண்ணகப் பேரின்பத்தை அடைவதற்காக அவர்களுக்காக இறைவேண்டல் செலுத்தும் இந்த வழக்கம் "தூய்மைப்பெறும் நிலை" பற்றிய நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்ததாகும். "தூய்மைப்பெறும் நிலை" என்பது கடவுளோடு நட்புறவில் இறந்து, நிலைவாழ்வு உறுதி செய்யப்பட்டிருந்தாலும் விண்ணகப் பேரின்பத்தை அடையும்முன் தங்கள் பாவங்களுக்காக பரிகாரம் செய்யும் நிலையாகும். கத்தோலிக்க திருஅவை "உத்தரிக்கிற ஸ்தலம்" என்று இதனை அழைக்கிறது. இறந்து உத்தரிப்பு நிலையில் வேதனையுறும் நம்

உற்றார், உறவினர்கள், யாரும் நினையாத ஆன்மாக்களை இன்றைய திருப்பலியிலும், இந்த மாதம் முழுவதும் நிறைவேற்றப்படும் திருப்பலியிலும் நினைவுக் கூர்ந்து அவர்களுக்காக ஒப்புக்கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. துணிந்துச் செல் நான் உன்னோடிருக்கிறேன் என்றுரைத்த இறைவா, திருத்தந்தை முதல் பொதுநிலையினர் வரை அனைவரும் உமது அழைப்பை ஏற்றுத் துணிவுடன் உமது அருள்வாக்கை எடுத்துரைக்க உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உயிர்ப்பும் உயிருமான இறைவா, எம்மோடு வாழ்ந்து மரித்த அன்பர்கள், நண்பர்கள், யாரும் நினையாத ஆன்மாக்கள் அனைவரும் உமது இரக்கத்தைப் பெற்று, முகமுகமாய் சந்திக்கும் வரம் பெற்று, முடிவில்லா பேரின்பத்தில் அக்களிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. மன்னிப்பின் தேவனே இறைவா, சிலுவை சுமந்து, இரத்தம் சிந்தி, மனித மீட்புக்கு காரணமாக இருந்த உமது திருமகனின் இறப்பினால் இறந்த நம்பிக்கையாளர்கள் அனைவரும் தங்களின் வாழ்வில் செய்த அனைத்துப் பாவங்களையும் மன்னித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் இறைவா, மண்ணக வாழ்வைப் போன்றே விண்ணக வாழ்வு எமக்குண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் விண்ணக வாழ்விற்கு எங்களை தகுதியாக்கிக்கொள்ள வேண்டிய வல்லமையை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 04.11.2023 புனித சார்லஸ் பொரோமெயோ திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

அன்புக்குரியவர்களே, 1538ல் பிறந்த சார்லஸ் பொரோமெயோ அரண்மனையில் வாழ்ந்தாலும் தன்னுடைய 12வயதில் தாழ்ச்சியின் உச்சத்தில் தன்னை ஆழ்ப்படுத்தி, துறவியாகும் விருப்பத்துடன் உச்சந்தலையில் வட்டம் போட்டு தன்னை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தவர். தன் தந்தையின் இறப்புக்குப் பின் சொத்துக்கள் அனைத்தும் சார்லஸின் அண்ணன் கவனித்து வந்தார். அவரும் இறக்கவே, சார்லஸின் மாமா கர்தினால் ஆன்ஜலோ 4ம் பத்திநாதர் என்ற பெயரில் திருத்தந்தையாக இருப்பவர் உட்பட எல்லா உறவினர்களும் சார்லஸை குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் பாதுகாக்க திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தினார்கள். ஆனால் சார்லஸோ, "நான் குருவாக விரும்புகிறேன்" என்று உறுதியாக சொல்லிவிட்டார். 1563ல் குருவாகிய சார்லஸ், "திரித்தெந்து பொதுச்சங்கம்" கூட்டப்படவும் திருஅவையில் மறைக்கல்வி, திருப்பலி நூல், கட்டளைச் செபங்கள்

ஆகியவற்றை திருத்தி ஒழுங்குப்படுத்துவது போன்ற மிக முக்கிய முடிவுகள் எடுக்கப்படவும் மூல காரணமாக விளங்கினார்.

மிலான் நகர பேராயராக திருப்பொழிவு பெற்றவர் உடனே ஆயர் குருக்கள் மன்றக் கூட்டத்தைக் கூட்டி பல வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தினார். தடுமாறி வாழ்ந்து கொண்டிருந்த குருக்கள் ஆயர்களை ஒழுங்குபடுத்தியதால் சுடப்பட்டு, பிழைத்தார். தமக்கென்று ஏதும் வைத்துக்கொள்ளாமல் ஏழைகளுக்கு எப்போதும் உதவி, வாழ்நாள் முழுதும் தாழ்ச்சியோடு நற்கருணை, சிலுவையில் அறையுண்ட இயேசு மற்றும் ஏழை மக்கள் என்று வாழ்ந்து 1584 நவம்பர் 3ம் நாள் மறைந்தார். திருத்தந்தை 5ம் பவுல் அவர்களால் 1610 நவம்பர் 1ம் நாள் புனிதராக உயர்த்தப்பட்டார். இன்றைய நற்செய்தி நமக்கு உணர்த்தும் செய்தியும் இப்புனிதரின் தாழ்ச்சி மிகுந்த வாழ்வைத்தான். உண்மையான தாழ்ச்சி எதில் உள்ளது? இப்போது பணிந்து போனால் பிறகு உயர்வு பெறலாம் என்ற எதிர்பார்ப்போடு செயல்படுவது உண்மையான தாழ்ச்சி அல்ல. மாறாக தற்புகழ்ச்சி என்பது கடவுளின் முன் அனைவரும் சமம் என்னும் உண்மைக்கு எதிராகப் போவதை நாம் உணர்வதும், நம்மைத்தேடி வந்த கடவுள் தம்மை தாழ்த்தி நம்மோடு ஒன்றான கடவுள் என்பதை கருத்தில் கொள்வதும்தான். எனவே நாமும் பாகுபாடுகளை அகற்றி, சமத்துவ சமுதாயம் உருவாகிட நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அழைப்பை நாம் முழுவதுமாக உணர்ந்து வாழ வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் தங்களது மந்தையை ஏற்றத்தாழ்வின்றியும் பாகுபாடுகளைப் பாராமல் தொடர்ந்து வழிநடத்திட தேவையான பலத்தை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, தாழ்ச்சியை கடைப்பிடித்து அதன் வழியில் திருநிலையில் உள்ளவர்களையும் பொதுநிலையினரையும் ஒன்று சேர்த்து வாழ்ந்த எம் புனிதர் சார்லஸ் பொரோமெயோவை போன்று பிறரிடமிருந்து எதிர்பார்க்காமல் பிறருக்கு வழங்குகின்ற நல்ல மனதை தர வேண்டுமென உம்மை மன்றாடுகின்றோம்.
3. வேதியர்களுக்காக மன்றாடுகிறோம். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைப்பணியை திறம்பட செயல்படுத்த தேவையான அருளை தந்தருள வேண்டுமென்று வேதியர்களின் பாதுகாவலரான புனித சார்லஸ் பொரோமெயோ வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள், உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 05.11.2023 பொதுக்காலத்தின் 31ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

I. மலா. 1: 14-2:1-2,8-10 II. 1தெச. 2: 7-9,13 மத். 23: 1-12

இறையேசுவில் பிரியமான அன்பு உள்ளங்களே, இறைவனின் கட்டளைகளை கடைப்பிடிக்காமல் நடந்தால், கட்டளைகளை கலங்கப்படுத்தினால் அவர்கள்மீது சாபத்தைத் தருவதாகக் கூறுகிறார். பொறுப்பில் இருப்பவர்கள் தனக்கும் பிறருக்கும் கடமைப்பட்டவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது என்கிறார். இரண்டாம் வாசகத்தின் வழியாக தூய பவுல், நற்செய்தியின் பொருட்டு துன்பப்படுவதைக் குறித்தும் பெருமைப்படுகிறோம் என்றும் கடவுளின் நற்செய்தியை மட்டுமல்ல மாறாக, தங்களையே கையளிக்க ஆவலாய் உள்ளோம் என்றும் குறிப்பிடுகிறார்.

இன்றைய நற்செய்தியில் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பரிசேயர்களும், மறைநூல் வல்லுநர்களும் தேடுவதும் விரும்புவதும் பேரும் புகழும், பெருமையுமே என்று வலியுறுத்திக் கூறுகிறார். பரிசேயர்கள் எதை எதையோ தேடி அலைந்தார்கள், நாம் எதைத் தேடிக்கொண்டிருக்கிறோம்? பரிசேயரைப்போல புகழையும், குறுக்கு வழியில் பணத்தையும், பெருமையையும் தேடிக்கொண்டு இருக்கிறோமா? நற்செய்தியில் இயேசுவின் அறிவுரையையும் விழிப்புணர்வையும் நமக்கானதாக என்று எடுத்துக்கொள்வோம். வறியவரை உயர்த்திட, விழுந்தவரை கைத்தூக்கிவிட, வலுவிழந்தவரை ஊக்கமளித்து உற்சாகப்படுத்திட வாழ்விழந்தவரை வாழ்வில் உயர்வடையச் செய்திட பாடுபடுவோம். முன்னேற்றத்தை அவர்கள் மத்தியில் கொண்டு வருவோம், பணியாளனாய் இருப்பதே நமது தலைச்சிறந்த பணியாகக் கொண்டு வாழ்ந்திடுவோம். "பணிபுரியவே" என்ற இயேசுவின் விருதுவாக்கை நமது விருதுவாக்காகக் கொண்டு செயல்படுவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், அனைவரும் இயேசுவின் வழிகளைப் பின்பற்றி திருஅவையின் வளர்ச்சிக்காகவும் மக்களை நிலைவாழ்வுக்கு வழிநடத்த தங்களையே தாழ்த்திப் பணி செய்யயும் நல்ல மனதை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, நீர் எங்களுக்குத் தயவாய் தந்த நல்வாழ்வினை நாங்கள் சந்திக்கும் உடனிருக்கும் சகோதர சகோதரிகளுக்கு ஆறுதல் அளிப்பவர்களாக வாழ எங்களைத் தாழ்த்திக்கொள்ளும் மனப்பக்குவத்தை எங்களில் வளர்த்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நன்மைகளின் ஊற்றே எம் இறைவா, எங்களிடம் உதவியும், அன்பும் எதிர்ப்பார்ப்பவர்களிடம் அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யக் கூடிய தாராள மனதை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. தூய்மையே உருவான இறைவா, நாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தையும், சுயநலத்தையும் விட்டு பொதுநலத்துடன் வாழவும் இறைவனின் திருவுளத்திற்கு பணிந்து அவரையே பற்றிக்கொண்டு வாழ்வில் உயர உமதருளைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 09.11.2023 இலாத்தரன் ஆலயம் நேர்ந்தளிப்பு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. எசே. 47: 1-2, 8-9,12 II. 1கொரி. 3: 9-11, 11-17 யோவா. 2: 13-22

தொடக்க கால திருஅவையில் ஆலயங்களின் நேர்ந்தளிப்பு நாளையும் விழாவாக கொண்டாடினர். ஆலயங்களின் நேர்ந்தளிக்கும் நாள் என்பது பேராலயத்தின் பிறந்த நாள் என்று அழைக்கும் வழக்கமும் இருந்தது. உலகிலுள்ள ஆலயங்களுக்கெல்லாம் தாய் ஆலயமாக விளங்கும் இப்பேராலயம் மன்னர் கொன்ஸ்தான்தின் என்பவரால் எழுப்பப்பட்டது. மன்னருக்குத் திருத்தந்தை சில்வெஸ்டர் திருமுழுக்குக் கொடுத்த அதே இடத்தில் இவ்வாலயம் கட்டப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகள் திருத்தந்தையர்கள் இவ்வாலயத்திற்கு அருகில் தங்கினார்கள். இவ்வாலயம் தீயினால் பாதிக்கப்பட்டு இப்போதுள்ள இதே பெயர் கொண்ட பேராலயமாக கி.பி. 16வது 17வது நூற்றாண்டுகளில் முழுமையடைந்தது.

கி.பி. 4ம் நூற்றாண்டு முதல் 16ம் நூற்றாண்டுவரை இப்பேராலயத்தில் 5 பொதுச்சங்கங்கள் நடைபெற்றுள்ளன. ஆயர்கள் பேரவை 20 நடைப்பெற்றுள்ளன. 12ம் நூற்றாண்டு முதல் "மீட்பின் பேராலயம்" என்று அழைக்கப்பட்ட பெயர் மாறி இப்போது திருமுழுக்கு யோவான் பெயரால், இப்பேராலயம் அழைக்கப்படுகிறது. இங்குதான் புனித பேதுரு, பவுல் இவர்களின் தலைகள் வெள்ளிப்பாத்திரங்களில் புனிதமாக வைக்கப்பட்டுள்ளன. இறைவனின் ஆலயத்தை அபிஷேகம் செய்வது தகுதியே. ஏனெனில் தேவாலயங்கள் இறைவனின் வீடு. செபத்தின் இடம், இறைவன் அங்கே வசிக்கிறார். அது அநேக வரங்களைப் பெற்றுக்கொள்ளும் இடம். எனவே நாம் ஆலயத்திற்குள் செல்லும்போதெல்லாம் திருப்பேழையில் இயேசு உயிரோடு இருக்கிறார் என்பதை நினைவில் கொள்வோம். இவ்விழாவினைச் சிறப்பிக்கும் நாம், உண்மையான உயிருள்ள இறைவனின் ஆலயங்களாகத் திகழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் தங்களின் அழைப்பின் பொருளுணர்ந்து, அவரின் குரலுக்கு என்றும் செவிமடுத்து, உண்மையுள்ளவர்களாக வாழவும், இறையரசை உலகமெங்கும் கட்டியெழுப்பக் கூடிய ஆற்றலையும் தூய ஆவியாரின் துணையையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் இறைவா, உம்மைத் தேடிவரும் அனைவருக்கும் நலன்களும், வளங்களும், ஆசீரும் அளித்து, உம்மீது பற்றுள்ளவர்களாக வாழ வைப்பதுபோல், உம்மைவிட்டு விலகியிருப்போரை கருணைக்கண் கொண்டு உம்மைப்பற்றிக்கொண்டு வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இன்பத்தை இலவசமாக அளிப்பவரே, திருவருகைக்காலத்தை எதிர்நோக்கி காத்திருக்கும் நாங்கள், உம் வருகையினால் விண்ணையும் மண்ணையும் பிரிக்கும் பாவங்களிலிருந்து விடுதலை உண்டு என்பதை முழுநம்பிக்கையோடு நம்பி வாழ எங்கள் அனைவரையும் உம் அருட்கரத்தால் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 10.11.2023 புனித பெரிய லியோ திருத்தந்தை திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்றைய நாளில் புனித பெரிய லிகோரி என்ற புனிதரின் திருப்பலியை சிறப்பிக்க அழைக்கிறது. புனித பெரிய லியோ (சிங்கராயர்) ஒரு மாபெரும் திருத்தந்தை பெரிய என்ற வார்த்தை மூன்று திருத்தந்தைகளுக்கு மட்டுமே உரியது. புனித பெரிய லியோ மறைவல்லுனரும், திருத்தந்தையுமாக இருந்தவர். கி.பி. 5ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். "துஸ்கனி" என்னும் இடத்தில் பிறந்தவர். கி.பி. 440ல் திருத்தந்தையாக பொறுப்பேற்றார். ஆங்காங்கே பிளவுப்பட்டிருந்த அனைத்து சபைகளையும் ஒற்றுமைப்படுத்தியவர். திருத்தந்தையாக பொறுப்பேற்கும் முன்பு ஒரு சிறந்த திருத்தொண்டராக இருந்து திருத்தந்தைக்கு நல்ல ஆலோசகராக இருந்தவர். இவரது அறிவுத்திறன் கொண்ட பேச்சாற்றலினால் உலகிற்கு அமைதி கொண்டு வரவும் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை கொண்டு வந்தார். இவரது காலத்தில் பல தப்பறைகள் உலவினது "பெலாஜியன்", மனிகேயி, ரெஸ்போரியன் என்ற தப்பறை கொள்கைகளினால் மனிதர்களிடையே பல குழப்பங்கள் ஏற்பட்டன. அவைகளுக்கு மிக சரியான விளக்கமுடன் போதனை கொடுத்துள்ளார். கிறிஸ்துவின் இரண்டு தன்மைகளான மனித தன்மை, தெய்வ தன்மை இரண்டையும் மிக விளக்கமாக தூய ஆவியின் அருள்கொண்டு, அதாவது முதல் திருத்தந்தை புனித பேதுரு

போன்று நிர்வாக திறன் கொண்டு பல பிரிவினைக் கொள்கைகளை தகர்த்தெறிந்து உறுதியான இறை நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள மிகவும் செயலாற்றியுள்ளார், திருஅவையில் தவறுகள் நடந்தபோது துணிந்து அதை கண்டித்து அவைகளை திருத்தினார். 9லட்சம் எதிரிகள் உரோமையின்மீது படையெடுத்தபோது எதிரிகளின் தலைவனான "அர்சிலா" என்பவனை திருத்தந்தையின் உடையோடு தனியாகச் சந்தித்து அவனை மனந்திருப்பினார். உரோம் நகரை மீட்டெடுத்த பெருமை இவரையே சாரும். அதனாலேயே "சிங்கம்" என்ற "சிங்கராயர்" என்ற பெயரைப் பெற்றார். இவ்வளவு துணிச்சலாக உறுதியோடு திருஅவையை கட்டியெழுப்பிய புனித பெரிய லியோவைப் போன்று நாமும் தவறை சுட்டிக்காட்ட தயங்காமல் தைரியமுடன் வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. சத்தியத்தின் ஜீவஜோதியே, எமது திருஅவையின் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் மற்றும் இருபால் துறவறத்தார் அனைவரும் இயேசுவின்மீது ஆழ்ந்த நம்பிக்கையோடு கிறிஸ்துவின் வழிகாட்டுதல்களை புரிந்துக்கொண்டு மக்களை நல்வழியில் நடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஒற்றுமையே ஜெயம் என்னுரைத்த இறைவா, உலகெங்கிலும் நிகழ்ந்துக் கொண்டிருக்கும் போராட்டங்கள், குழப்பங்கள், மக்களின் உயிர் பலிகள் அனைத்தையும் உமக்கு கையளிக்கின்றோம். ஒற்றுமை என்னும் நல்லிணக்கத்தை பொறுப்பேற்றிருக்கும் தலைவர்கள் உலகை காப்பாற்றும் உன்னத செயலை திறம்பட செயல்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, அக்கால சூழலிலேயே தவறான தப்பறைகள், குழப்பங்கள் தோன்றியபோதே புனித பெரிய லியோ போன்ற திருத்தந்தையர்களை கருவியாக்கி தீமையானவர்களை மனந்திருத்தி வரமளித்ததுபோல கிறிஸ்தவ நெறிகளை உலகமெங்கும் பரவச் செய்ய நல்ல நற்செய்திப் பணியாளர்களை உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 12.11.2023 பொதுக்காலத்தின் 32ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

I. சா.ஞா. 6: 12-16 II. 1தெச. 4: 13-18 மத். 25: 1-13

அனைவருக்கும் தீபஒளி நல்வாழ்த்துக்கள். நாம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும் இடம் எதுவென்றால் பண்டிகை அல்லது திருமணவிழா. இந்த இரண்டு நிகழ்ச்சியிலுமே நாம் எவ்வாறு தயாரிக்க வேண்டுமென்பதை இன்றைய வாசகம் நமக்கு தெளிவாகக் கூறுகிறது. மணமகனை எதிர்க்கொள்ள தங்கள் கைகளில் விளக்கோடு புறப்பட்டு

செல்லும் அறிவிலிகளையும், முன்மதியுடையோரையும் பற்றி இன்று நாம் சிந்திக்க இருக்கின்றோம். விளக்கு என்பது நற்செயல்களைக் குறிக்கும் உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு விண்ணகத் தந்தையைப் புகழ்வார்கள். அறிவிலிகள் மணல்மீது கட்டப்பட்ட உறுதியற்ற வீட்டிற்கு ஒப்பாவர். எனவே ஒருவர் புரிகின்ற நற்செயலை மற்றவரோடு பகிர்ந்து கொள்ள இயலாது ஒவ்வொருவரும் கடவுள் முன்னிலையில் பொறுப்போடு செயல்பட்டு அவர் சொற்படி நடக்க அழைக்கப்படுகிறார்கள். காரிருளில் வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள், ஒளியாம் இறைவனை நினைத்து கொண்டாடுகிற தீபாவளி நன்னாளில் இம்மண்ணில் இன்னும் ஒளியாம் இறைவனை அறியாத மக்களையும் நாம் அறிவோம். உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் என்று சொன்ன இறைமகனது கூற்றை ஏற்றுக்கொண்டு இந்த காலகட்டத்திலே உண்மையாம் இறைவனை எடுத்துச் செல்லுகின்ற தீபமாக நாம் மாற வேண்டும். திருமுழுக்கின்போது ஏற்றுகின்ற திரியானது இறைவனின் பாதுகாப்பில் அணையாத தீபமாக இருக்கிறோம் என்பதை நினைவு கூறும் நாளாக இந்நாள் அமைய வாழ்த்துக் கூறி பக்தியோடு பலியைத் தொடர்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் திருஅவையின் வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் அயராது உழைக்கும் இவர்களின் பணிசிறக்க தேவையான அனைத்து அருள்வரங்களையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. சமாதானத்தின் தூதுவரே எம் இறைவா, உலக ஒற்றுமைக்காக உம்மை வேண்டுகிறோம். எங்கு பார்த்தாலும் சண்டை, சச்சரவு, கொலை, கொள்ளை, வன்முறை போன்ற பிரச்சனைகள் நீங்கி நாட்டில் அமைதி ஒற்றுமை, சமாதானம் நிலவவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வழிகாட்டும் ஒளியாம் இறைவா, தீபத்திருநாளைக் கொண்டாடும் மக்கள் தங்களின் கவலைகள், கஷ்டங்கள் எல்லாவற்றையும் மறந்து தங்களது குடும்பத்துடன் ஒற்றுமையோடும் மகிழ்வோடும் விழாவினைச் சிறப்பிக்க வேண்டிய உமதாசீரை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. படைத்து பாதுகாப்பவரே, இன்றைய இளைஞர், இளம் பிள்ளைகளை உம்மிடம் சமர்ப்பிக்கின்றோம். மனம்போன போக்கில் வாழ்வை சீரழித்துக் கொள்ளாமல், சரியான நேரத்தில் அவர்களுக்குத் தேவையான வேலைவாய்ப்பினை அளித்து வாழ்வை நல்வழியில் நடத்திட வேண்டிய அருள்வரங்களைப் பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.11.2023 புனித ஆர்த்திமெதே சாத்தி விழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் இனியவர்களே, மற்றவர்களைப் பாவத்தில் விழச்செய்வது எவ்வளவுக்கு தவறான செயல் என்பதும், அதனால் வரக்கூடிய கேடு, எந்த அளவுக்கு மோசமானதாக அமையவிருக்கிறது என்பதையும் இன்றைய நற்செய்தியில் இயேசு நமக்கு அறிவுரையாகக் கூறுகிறார். தவறு செய்வதைவிட தவறு செய்வதற்கு காரணமாய் இருப்பது மிகப்பெரிய குற்றம். குறிப்பாக சிறியோருக்கு அதாவது ஏழை எளிய, இயலாமையில் இருப்போர், நிரபராதிகள், மன்னிப்பு வேண்டுவோர் - இவர்கள் தவறுவதற்கு காரணமாய் இருப்பவர்கள் கடும் தண்டனைக்கு உறியவர்கள் என்கிறார் இயேசு. மேலும் இன்று சலேசிய அருட்சகோதரரான புனித ஆர்த்திமிதி சாத்தி அவர்களின் விழாவினை நினைவு கூறுகிறோம். மறைபணிக்காக தனது சலேசியர்களை தொன் போஸ்கோ வெளிநாடுகளுக்கு அனுப்பியபோது, "இளையோர், நோயுற்றோர், ஏழை எளியவர்களுக்கு பணி செய்ய வேண்டும், கடவுளின் ஆசீரும் நல்லவர்களின் உதவியும் உங்களுக்குக் கிடைக்கும்" என்று கூறி அனுப்பினார்.

இவ்வார்த்தைகளைச் அருட்சகோதரர் சாத்தி தன்னுடைய உள்ளத்தில் ஏற்று அன்றுமுதல் நோயுற்றோரை கவனிப்பதே தன்னுடைய ஆன்மீகப் பயணம் என்று தன் இறுதி மூச்சு வரை கடைப்பிடித்தார். இறுதி நாட்களில் எந்தவித அச்சமோ கலக்கமோ இன்றி, தன் மரணச்சான்றிதழை தானே எழுதிவைத்த மாமனிதர் சாத்தி. திருப்பலியும் செப மாலையும் அவர் விரும்பிய பக்தியின் வெளிப்பாடுகள். "பணிவிடை பெற அல்ல பணிவிடை புரிவதற்கே" என்று தனது வாழ்நாள் முழுதும் சலேசிய புதுப்புனலாக வாழ்ந்த ஆர்த்திமிதே சாத்தி, விண்ணக வாழ்வின் நிரந்தர, நிலையான மகிழ்வின் முன் இவ்வுலகின் துயரங்கள் "சிறிது காலமே" என்ற நம்பிக்கையுடன் இறைவனது திருவுளத்தை நிறைவேற்றியவர் என்றால் அது மிகையாகாது. எனவே நம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கும் பணியை பொறுப்புணர்வோடும், பொதுநலனோடு, பிறருக்கு இடறல் இல்லாத வாழ்வை முன்னெடுக்கும் அருள்வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நிலைவாழ்வின் தெய்வமே இறைவா, உம்மை போற்றுகிறோம். இவ்வுலகில் நாங்கள் வாழும் சிறிது காலத்தில் உம்முடைய

திருவுளத்தை நிறைவேற்றிடும் வரத்தினை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. வாக்கு மாறாத இறைவா, நீர் வாக்களித்தவாறே எங்கள் துயரங்கள் நீங்கி, எங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்கும் என்ற நம்பிக்கையில், துன்பங்கள் குறித்து, அழுது புலம்பாமல், துணிவுடன் வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 15.11.2023 அருளாளர் மதலேன் மொரானோ திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று அருளாளர் மதலேன் மொரானோ அவர்களின் விழா திருப்பலியை சிறப்பிக்கின்றோம். இவர் இளம் வயதிலேயே தந்தையை இழந்தார். அவர் தன் தாய்க்கு அனைத்து வேலைகளிலும் உதவியாக இருந்தார். அவரின் உறவினரான ஒருவர் குருவாக இருந்தார். அந்த குருவின் உதவியால் இவர் தனது படிப்பை தொடர முடிந்தது. இவரின் ஆசிரியை இவரின் திறமையைப் பார்த்து சிறு பிள்ளைகளுக்கு படிப்பில் உதவ நியமித்தார். அப்போது ஒருநாள் புட்டிக்லீரா தே அஸ்தி என்ற ஊருக்கு போகும்போது புனித தொன் போஸ்கோவைச் சந்தித்தார். அப்போது மடோனாவின் நீண்டநாள் கனவான ஆசிரியராக வேண்டுமென்பதை அவரிடம் கூறினார். இதன் மூலம் தனது 17வது வயதிலேயே ஆசிரியர் பயிற்சி முடித்து சான்றிதழும் பெற்றார். 19வது வயதிலேயே கற்பிக்க தொடங்கினார். 14ஆண்டுகள் விடாமுயற்சியுடனும் திறமையுடனும் பணிசெய்து அனைவரின் நன்மதிப்பைப் பெற்றார். தனது சேமிப்பில் தாயாருக்கு ஓர் இல்லம் வாங்கி பரிசளித்தார். தொன் போஸ்கோ இவரை மோர்னீஸ் நகருக்கு அழைத்துச் சென்று அன்னை மசரெல்லோவிடம் அறிமுகம் செய்தார். அவரோடு இணைந்து பணிபுரிந்த நேரம் தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தார். இவர் தினமும் இறைவனிடம் புனிதராகும் வரை தான் சாகக் கூடாது என்று வேண்டினார்.

தொன்போஸ்கோவின்கொள்கைகளைபரப்புவதில்தீவிரமாகஇருந்தார். சிசிலி நகரமான தூரினில் FMA சபை பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் சபைகளையும், அருட்சகோதரிகளையும் பட்டறைகளையும், பள்ளிகளையும் உருவாக்கினார். இதனால் நிறைய தொழில்கள் இவரைத் தேடி வந்தது. அவருக்கு அன்னை மரியும் புனித வளனாரும் துணையாக இருந்தனர். அவரின் கடின உழைப்பால் உயர்ந்ததை கண்டு அனைவரும் மகிழ்ந்தனர். அவரின் இறுதி நேரத்தில் சிலியில் 18 இல்லங்கள் 142 அருட்சகோதரிகள் 20 புதிய பயிற்சி பெறுபவர்கள், மற்ற பணியாளர்களும் இருந்தனர். நோயினால் பாதிக்கப்பட்டு மார்ச் 26ம் தேதி 1908ல் இறைவனில் இணைந்தார். இவரின் சிறப்புகளை கேள்வியுற்ற திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் இவருக்கு 1994ல் அருளாளர் பட்டம் வழங்கினார். இவரை இன்று நம் வாழ்விற்கு உறுதுணையாக நிற்க வேண்டி மன்றாடுகிறோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, உம்மால் நிலை நிறுத்தப்பட்ட தாய் திருஅவை என்றும் நிலைபெற கடின உழைப்பு தேவை. ஆகவே இதற்காக அழைத்து அனுப்பப்பட்ட அனைவரும் எத்தனை சவால்கள் சங்கடங்கள் வந்தாலும் துணிந்து நின்று காத்திடவும் வழி நடத்திடவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. வல்லமையே இறைவா, திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் அருளாளர் மதலேனாவைப்போல் உறுதிமொழி ஏற்று அவரவருக்கு வழங்கப்பட்ட வரங்கள் கனிகள் கொண்டு வளமாக அனைவரையும் வாழவைக்க வேண்டிய அனைத்து வரங்களையும் பொழிந்து ஆசீர்வதிக்க வேண்டுமென மன்றாடுகிறோம்.
3. உயர்ந்தவரே இறைவா, உம்மைப்போல் இன்றும் வாழும் எம் புனிதர்களை பின்பற்றி வாழவும் நிலை வாழ்வு நிலையாக உண்டு என உம்மோடு இணைந்த நம்பிக்கையாளர்களை நினைவுக் கூர்ந்து நல்லவைகளை ஏற்று பின் செல்லவும் உமது துணை வேண்டி மன்றாடுகிறோம்.

## 19.11.2023 பொதுக்காலம் 33ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. நீ.மொ. 31:10-13,19-20,30-31 II. 1தெச. 5: 1-6 மத். 25: 14-30

இறையேசுவில் பிரியமானவர்களே, நமது நீதிமொழிகளும், திருப்பாடலும் நமக்கு தரும் அறிவுத்துளிகள், திறமை வாய்ந்தரும் ஆண்டவரிடம் அச்சம் கலந்த அன்பும் நிறைந்தவளான பெண்மணி தன் குடும்பத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் அப்படி நடைபெறும் குடும்பம் எவ்வாறு ஆண்டவரில் ஒளிவீசும் என்பதையும் அவரும் அக்குடும்பத்தில் வாழும் ஆடவரும் எந்தளவுக்க ஆசிபெறுவார்கள் என்பதையும் கூறுகின்றன. மேலும் புனித பவுல் தெசலோனிய மக்களிடம் ஆண்டவர் வரும் நாளில் நாம் இருள் என்னும் அலகையை சார்ந்தவர்களாக இல்லாமல், ஆண்டவரின் ஒளியை சார்ந்தவர்களாக விழிப்புணர்வோடும், அறிவுத் தெளிந்தவர்களாக இருப்போம் என்றும் கூறுகிறார்.புனித மத்தேயு நற்செய்தியாளர் ஆண்டவரின் அன்பில் நிலைத்திருக்க விண்ணரசை அடைய இயேசு கிறிஸ்துவின் "தாலந்து" உவமையை விளக்கி, ஆண்டவர் கொடுத்ததை தமது முயற்சியால் பெருக்க வேண்டும், பயனற்றவர் தனது முயற்சியின்மையால் இருப்பதையும் இழப்பார் என்றும், முயற்சியுடையோர் தனது பொறுப்புகள் அனைத்தையும் உணர்ந்து உறுதியுடன் கடின உழைப்பை நல்கி மேலும் உயர்வடைவார் என்றும் கூறுகிறார். "உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும், அவர்கள் நிறைவு பெறுவர். இல்லாதோரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்" (மத்.25:19). அனைவரையும் சமமாக பாவிக்கும் இறைவனின் விண்ணரசும் நம்மில் நம்பிக்கையுடன் முயன்றவருக்கு கிடைக்கும் என்ற சிந்தனையுடன் இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அனைத்துலக அரசரே எம் இறைவா, உம் வழிசெயலாற்றும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவற கன்னியர், மற்றும் திருநிலையினர் அனைவரும் எதற்கும் அஞ்சாமல், துணிவுடன் அவரவர் கடமைகளையும் பொறுப்புகளையும் உறுதியுடன் செயலாற்ற உம் அருள்வேண்டி மன்றாடுகிறோம்.
2. சமாதானத்தின் தூதுவரே எம் இறைவா, இன்று குடும்பங்களில் நல்லிணக்க தன்மைகள் குறைந்து, தீய பழக்க வழக்கங்களால் சீரழிந்துக்கொண்டிருக்கும் குடும்பங்களில் ஒற்றுமையும், சமாதானமும், விட்டுக்கொடுக்கும் மனநிலையையும் உருவாக வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. விண்ணுக்கும் மண்ணுக்கும் தந்தையே, விண்ணுலக திறவுகோலை மனுமகனின் பாடுகள் வழியாக எமக்களித்தீர். நாங்கள் அனைவரும் உம்மில் சரணடைய வேண்டிய மனவுறுதியும், நம்பிக்கையும் எங்களுக்கு அளித்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. பாதுகாக்கும் பரம தந்தையே, தாய் தந்தையரால் கைவிடப்பட்டு தவிக்கும் குழந்தைகளையும், முதியவர்களையும் உம்மிடம் ஒப்படைக்கின்றோம். அவர்களுக்கு வாழ்வில் மனநிறைவும், சந்தோமும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.11.2023 கன்னி மரியாவை காணிக்கையாக்கும் விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இறையேசுவின் பெயரால் அர்ச்சிக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்ட இறைச்சமூகமே, இன்று நம் தாயாம் திருஅவை புனித கன்னி மரியாவை காணிக்கையாக அர்ப்பணித்தல் விழாவினைச் சிறப்பிக்க நம்மை அழைத்திருக்கின்றது. அன்னை மரியாள் 3வயதில் ஆலயத்திற்கு காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்டார். இறைவனின் திருவுளப்படி 6வயதில் தந்தையையும் 8 வயதில் தாயையும் இழக்கின்றார். மரியாவின் காணிக்கை விழா கி.பி. 7ம் நூற்றாண்டில் தொடங்கி உலகின் அனைத்துப் பகுதியிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் பதினோராம் நூற்றாண்டிலேயே "மரியாவின் அமல உற்பவம்" கொண்டாட்டம் வின்சென்ஸ்டர் மற்றும் கேன்டர் பெயரில் கொண்டாடப்பட்டுள்ளது. "பாவமில்லாமல் பிறந்த மரியாவை அளவுகடந்த மரியாதையோடு பார்க்கிறேன்" என மார்ட்டின் லூத்தர் கூறுகிறார். மரியாவை "அருள் நிறைந்தவர்" என்று குறிப்பிடுகிறது (லூக்.1:28). மரியா தாயின் கருவில் உருவான நேரத்திலிருந்தே பாவத்திலிருந்து இறையருளால் காப்பாற்றப்பட்டிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் மீட்பு, முன்கூட்டியே மரியாவுக்கு அவர் கருவான நேரத்திலேயே கொடுக்கப்பட்டு விட்டது என்கிறார் விவிலிய பேரறிஞர் ரேமண்ட் பி. பிரௌன். இறைவனின் அன்னை ஆலயத்தில் நுழைந்த விழா

என்ற பெயரில் கிரேக்க மக்களால் கொண்டாடப்பட்டது. ஆலயப்பணிகளில் பயிற்சிப்பெற்றபின் அவருக்குப் பாதுகாவலராக புனித சூசையப்பர் நியமிக்கப்படுகிறார். அன்னை மரியாவை இறைவனின் தாயாக புனிதமான உயிராகவே மதித்து வந்தனர் மக்கள். 5ம் நூற்றாண்டில் மரியாவை புத்தம் புதிய படைப்பு, மாசற்ற மங்கை, குறைகளில்லாதவர், உடலிலும் உள்ளத்திலும் தூய்மையானவர். பாவம் அவரில் எந்த வெற்றிடத்தையும் ஏற்படுத்தவில்லை என்று புகழ்ந்தனர். அதற்குக் காரணம் மூன்று வயதிலேயே அர்ப்பணிக்கப்பட்டு இறைத்திருவுளத்தை நெறிபிறழாமல் கடைப்பிடித்து வாழ்ந்து மீட்புப் பணிக்கு துணையாக இணை இரட்சகியானார். நாமும் மரியாவைப் போன்று இறைத்திருவுளத்தை நெறிபிறழாமல் கடைபிடித்துவாழ பக்தியோடு திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அர்ப்பண வாழ்வின் நாயகனே எம் இறைவா, திருஅவைக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்துக்கொண்டிருக்கும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் அர்ப்பண வாழ்வின் மாட்சியை உணர்ந்து, திருஅவையின் புனிதத் தன்மையைக் காப்பாற்ற வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, இன்றைய தலைவர்கள் நீதிநெறியினை உணர்ந்து, சமுதாயத்தின் புனித வாழ்விற்கும் மனித மாண்பிற்கும், மதிப்பளிக்கும் விதத்தில் சட்டங்கள் இயற்றி மனித நேயத்தை காத்திட தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நலம் நாடும் நாயகரே, நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாங்கள், கன்னி மரியின் முன்மாதிரியைப் பின்பற்றி, எங்களின் வாழ்வை மாற்றிக்கொண்டு உமக்கேற்ற பிள்ளைகளாக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 24.11.2023 புனித ஆண்ட்ரு டுங் லாக் மறைசாட்சி திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவில் பிரியமானவர்களே, இவர் 1795ல் வடக்கு வியட்நாமில் பிறந்தவர். இவருக்கு 12 வயது இருக்கும்போது, இவரது பெற்றோர்கள் குடும்பத்துடன் வேலை வாய்ப்பிற்காக ஹனோய் என்ற இடத்திற்கு குடிபெயர்ந்தனர். அங்கு இவரது பெற்றொருக்கு வேலையும் கிடைத்தது. இவர் திருமுழுக்குப் பெற்றபோது இவருக்கு "ஆன்ட்ரூ" என்ற பெயர் சூட்டப்பட்டது. இவர் குருவாக அருட்பொழிவு பெற்று பங்குத்தளங்களில் பணியாற்றினார். இவர் தூய்மையின் முன்மாதிரியாக அறியப்பட்டார். இவர் வியட்நாம் நாடு முழுவதும் இறைவனுக்காக பணியாற்றினார். நற்செய்தியை நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று

அறிவித்து வந்தார். இதனை ஏற்றுக்கொள்ளாத அந்த நாட்டின் பேரரசன் இவரை கிறிஸ்தவர்கள் பலரையும் பலமுறை சிறையிலடைத்து சித்தரவதை செய்து வந்தான். இறுதியில் இவரது தலையைத் துண்டித்து அந்தப் பேரரசன் கொன்று போட்டான். 1839ம் ஆண்டு இவரும் இவரோடு வேறு 117 பேரும் மறைசாட்சியாக மரித்தனர். 1988ம் ஆண்டு ஜூன் 19 அன்று திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் இவருக்கும் இவரது தோழர்களுக்கும் புனிதர் பட்டம் வழங்கினார். பல இன்னல்கள் மத்தியிலும் இறையேசுவின் சீடர்களாய் வாழ்ந்து மரித்த இந்தப் புனிதர்களிடம் நாம் இறைநம்பிக்கையில் வாழ வரமருள வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நலனளித்து பாதுகாக்கும் எம் தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் எத்தகைய துன்பங்கள், சோதனைகள் வந்தாலும் உமது நற்செய்தியின் பாதையில் வழிநடக்கத் தேவையான அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் நாயகரே, குடும்ப பொறுப்புகளில் ஆரம்பித்து, அரசியல், மதம், சமுதாயம் என்று பல துறைகளிலும் பணிசெய்கின்றவர்கள், தங்களின் பொறுப்பினை சரியான முறையில் செயல்படுத்தவும், பிறரது மகிழ்வில் தங்களின் வாழ்வை அர்ப்பணித்து செயல்பட வேண்டிய அருளைப்பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. விடுதலையின் நிறைவே எம் இறைவா, பலவிதமான உடல் உள்ள ஆன்ம நோய்களால் வருந்தும் எம் மக்களைக் கனிவுடன் கண்ணோக்கி அவர்களுக்குத் தேவையான நற்சுகமும், புதுவாழ்வும் அளித்து பாதுகாத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 26.11.2023 கிறிஸ்து அரசர் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. சான்டோ

I. எசா. 34: 11-12,15-17 II. 1கொரி 15: 20-26,28 மத் 25: 31-46

கிறிஸ்துவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, நம் தாய்த் திருச்சபை திருவழிபாட்டு ஆண்டின் கடைசி ஞாயிறான இன்று கிறிஸ்து அரசர் பெருவிழாவைக் கொண்டாடுகிறது. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக பல நாடுகள் கடவுள் இல்லை என்று கூறின. அவற்றில் சில கிறிஸ்துவ நாடுகளும் அடங்கும். சில கிறிஸ்தவ நாடுகள் கிறிஸ்துவை வெளிப்படையாக வழிபடுவதற்குத் தடைவிதித்தன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்கள் கிறிஸ்துவை நம்ப வேண்டும். இவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு 11ம் பத்திநாதர் 1925ல் கிறிஸ்து அரசர் விழாவை ஏற்படுத்தினார். கிறிஸ்துவே உண்மையான அரசர் என்று

பகிரங்கமாக அறிக்கையிட்டார். அரசர்களையும் இறைவாக்கினர்களையும் தேடிச்சென்று ஆசீர் அளித்த இறைவன், ஆட்டுக்குட்டிகளை மேய்க்கும் ஆயனாக உருவெடுத்து, அவரின் ஆட்டுக்குட்டிகளாகிய நம்மைத் தேடிவந்து பாதுகாப்பார் என்பதை முதல் வாசகம் விளக்குகிறது.

கிறிஸ்து அரசரின் ஆசிபெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி நமக்குத் தெளிவுப்படுத்தியுள்ளது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, ஓர் அரசராக இருந்து நல்லவர்களையும் தீயவர்களையும் பிரித்தெடுத்து நீதித்தீர்ப்பு வழங்குவார். கிறிஸ்துவ மறையைப் பொறுத்தவரையில் இறைவனின் ஆசிபெற நம்மிடமுள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதைத் தவிர வேறு வழிகிடையாது. எவ்வாறெனில் பசித்தவர்களுக்கு உணவு கொடுப்பவர்கள், தாகமாயிருப்பவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பவர்கள், அன்னியரை ஏற்றுக்கொள்பவர்கள், ஆடையின்றி இருப்பவர்களுக்கு ஆடை அணிவிப்பவர்கள், நோயுற்றோரைக் கவனிப்பவர்கள், சிறையிலிருப்பவர்களைத் தேடிச்செல்கிறவர்கள் ஆகிய அனைவரும் கடவுள் வாழும் இல்லத்திற்குள் நுழையும் பேறு பெற்றவர்கள் என்றும், கிறிஸ்து அரசரின் ஆசிப்பெற்றவர்கள் என்றும் இன்றைய நற்செய்தி தெளிவாக அறிவுறுத்துகிறது. இயேசுவை நம் உள்ளத்தின் இல்லத்தின் அரசராக ஏற்க வேண்டுமென்றால் கிறிஸ்து அரசரின் அரசாட்சிப் பண்புகளாம் அன்பு, நீதி, உண்மை, மன்னிப்பு, இரக்கம் போன்றவைகளை நமது வாழ்வில் கடைபிடிக்கும்போது கிறிஸ்துவின் அரசு நம் வீடுகளிலும், வீதிகளிலும், பரவும் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்புத் தந்தையே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் போன்ற வழிகாட்டிகளுக்கு நல்ல ஆன்ம சரீர சுகமளித்து, இன்றைய காலகட்டத்தில் இவர்களுக்கு நேரிடும் இடையூறுகளிலிருந்து பாதுகாத்து என்றும் கிறிஸ்துவின் அரசில் நிலைத்து நிற்கும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் அரசே இறைவா, எங்கள் நாட்டையும், சமுதாயத்தையும் வழிநடத்தும் தலைவர்கள் சுயநலமின்றி நாட்டையும், மக்களையும் பாதுகாக்கும், ஆட்சியாளராக அவர்களை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் அரசரே இறைவா, நாங்கள் அனைவரும் இயேசுவின் இதய அன்பிலும், பிறரன்பிலும் வளர்ந்து சமூக அக்கறையுடன் செயல்பட்டு உமது இதயத்திற்கு நெருக்கமான இறையாட்சியைக் கட்டியெழுப்பிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. கிறிஸ்து அரசரே இறைவா, இன்றைய நாட்களில் கிறிஸ்துவையும், கிறிஸ்துவ மக்களையும் இழிவுப்படுத்தும்போது நாங்கள் மனந்தளராமல் நிலைத்து நின்று உமக்குச் சாட்சிய வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 30.11.2023 புனித அந்திரேயா திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

இறையேசுவின் அன்பு பிள்ளைகளே, இன்நன்னாளில் திருத்தூதர் புனித அந்திரேயாவின் விழாவை சிறப்பிக்க இங்கே கூடியிருக்கிறோம். இவர் புனித பிலவேந்திரர் என்றும் அழைக்கப்படுகிறார். புனித பேதுரு தன் சகோதரர் அந்திரேயாதான் இயேசு கிறிஸ்துவை அனைவருக்கும் அறிமுகப்படுத்தியவர் என்று கூறுகிறார். இவர் மிக எளிமையானவர், மீனவரான இவர் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை மிகத்துணிவோடு மக்கள் மத்தியில் போதித்தவர். தன் "மீன்பிடிக்கும் தொழிலை விட்டு இயேசுவைப் பின்பற்றியவர். தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட இவர், இயேசுவைப்பற்றி "கப்பதோசியா, கலாசியா, பிதீனியா, தெசலே, அக்காயா" ஆகிய இடங்களில் போதித்தார். "ரஷ்யா, ஸ்காட்லாந்து, அக்காயா போன்ற நாடுகளின் பாதுகாவலர் புனித அந்திரேயா". நீரோ மன்னரின் ஆட்சிக்காலத்தில் போதகரான புனித அந்திரேயாவை "ஓ" வடிவில் வைத்து சிலுவையில் அறைந்து கொன்றனர்.

இவ்வாறு மறைச்சாட்சியான புனித பிலவேந்திரர் தான் கொல்லப்படுவதற்கு இரண்டுநாள் முன்னும் உயிர்விடும் வரையிலும் போதித்து வந்தார். இவர் திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்தவர். திருமுழுக்கு யோவான் "ஆட்டுக் குட்டியாம் இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர் என்று இயேசுவைச் சுட்டிக் காட்டியவுடன்" "மெசியாவைக் கண்டோம்" என்று சொல்லி பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தவர். இன்றைய புனிதர் அந்திரேயாவின் இறைநம்பிக்கையையும், பிறரை இயேசுவிடம் அழைத்துச் செல்லும் பண்பையும் நாமும் பெற்று இறையேசுவின் உண்மையான சீடர்களாக நாமும் வாழ்ந்திட இத்திருப்பலியில் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்கள் வானகத் தந்தையே, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் இறைப்பணியை தம் சித்தமெனக் கருதி சிறப்பாக செயல்பட தேவையான அனைத்து அருள்வரங்களையும் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. எங்கள் அரணும் கோட்டையுமானவரே, எம் நாட்டையாள்வோர், தங்களின் சுயநலன் கருதாமல் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நல்லாட்சிப் புரிந்திடவும், ஏற்றத்தாழ்வு பாராமல் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கக் கூடிய வகையில் பெருந்தன்மையோடும் மகிழ்வோடும் செயல்வேண்டிய நல்லுள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அற்புதங்களின் ஆண்டவரே, நீர் தேர்ந்தெடுத்த உம் மக்கள் இஸ்ரயேல்மீது நடத்தப்படும் தாக்குதலும், முடிவுக்கு வராத உக்ரைன்

நாட்டு தாக்குதல் அலட்சியப்படுத்தும் மணிப்பூர் கொடுமைகளை, நீரே தடுத்து நிறுத்தி அம்மக்களைக் காப்பாற்றியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

### மரணம் என்பது முடிவன்று

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

கத்தோலிக்கத் திருஅவை இறந்த நம்பிக்கையாளர்களை நவம்பர் மாதம் முழுவதும் சிறப்பாக நினைவுக் கூர்ந்து செபிக்க நம்மை அழைக்கிறது. உலகில் பிறந்த எவருக்கும் ஒரு நாள் இறப்பு வந்தே தீரும், மரணம் இல்லாத மனிதர் என்று ஒருவரும் கிடையாது. நமது மீட்புக்காக மனிதராகப் பிறந்த ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்தார். ஆனால் இங்குதான் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோருக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வேறுபாட்டைக் காண்கிறோம். "இறப்பினால் கிறிஸ்தவரின் வாழ்வு மாறுபடுகிறதேயன்றி, அது முடிந்து போவதில்லை" என்று திருஅவை உறுதியாகக் கற்பிக்கிறது. இவ்வுலகில் மனிதரின் வாழ்வு முடிந்ததும், மறுவுலகில் நமக்கு மற்றொரு வாழ்வு தொடங்குகிறது என்பதை திருஅவை நமக்கு வழங்குகிறது. சிலுவையில் உயிர்விடும் நிலையில் இயேசுவிடம் மன்றாடிய நல்ல கள்வனிடம் இயேசு, "இன்றே நீ என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பாய்" என்று வாக்களித்தார். ஆகவே உலக முடிவில் நிகழும் பொது தீர்ப்புக்கு முன்பாகவே, நமது இவ்வுலக வாழ்வு முடிந்ததும் தனி தீர்ப்பு நிகழும் என்பது உறுதி. இதில் ஆன்மா பெறுகின்ற தீர்ப்பே, உலகின் முடிவில் நமது உடலோடு இணைந்த முழுமையான மனிதருக்கு வழங்கப்படும் நித்தியமானத் தீர்ப்பாக உறுதி செய்யப்படுகிறது.

நாம் இறக்கின்றபொழுது பாவங்கள் ஏதுமற்றத் தூயநிலையில் இருந்தால் விண்ணக வாழ்வுக்கும், நமது பாவங்களுக்கு மன்னிப்பு பெற்று கழுவாய் தேடும் நிலையில் இருந்தால் தூய்மைபெறும் (உத்தரிக்கும்) நிலைக்கும், பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டாமல் இழிவான நிலையில் இருந்தால் நரக நெருப்புக்கும் ஆண்டவர் நம்மைத் தீர்ப்பிடுவார். இங்கு நமது பாவங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையே மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. தீயோரின் அழிவில் ஆண்டவர் மகிழ்ச்சி கொள்வதில்லை, அவர்கள் மனந்திரும்பி வாழ்வுபெற வேண்டும் என்பதே அவரது உள்ளத்தின் ஏக்கமாகவும் ஆவலாகவும் இருக்கின்றது. "நான் உங்கள் எலும்புகளை நரம்புகளால் தொடுப்பேன், உங்கள்மேல் சதையைப் பரப்புவேன், உங்களைத் தோலால் மூடுவேன், நான் உங்களுக்குள் உயிர்மூச்சு புகச் செய்வேன், நீங்களும் உயிர் பெறுவீர்கள்" (எசே. 37: 5-6) என்னும் இறைவாக்கிற்கேற்ப இறந்தோரின் உயிர்த்தெழுதல் நிகழும். "உயிர்த்தெழுந்த மக்களாய் இருப்பதால், அவர்கள் வானதூதரைப் போன்று இருப்பார்கள்" (லூக்.20:34-38) என்று நித்திய வாழ்வின் நிலையை இயேசு விவரிக்கிறார்.

நாம் பெறவிருப்பது நித்திய பேரின்பமா அல்லது நித்திய தண்டனையா என்பது தனி தீர்ப்பிலேயே தெரிந்துவிடும் என்றாலும், அதனை பொது தீர்ப்பில் மனிதர்கள் அனைவரும் அறிந்து கொள்வர். "என் தந்தையிடம் ஆசி பெற்றவர்களே வாருங்கள்" அல்லது "சபிக்கப்பெற்றவர்களே என்னிடமிருந்து அகன்று போங்கள்" (மத் 25: 34,41) என்ற வாக்கியங்களில் தான் நமது தீர்ப்பு அடங்கியுள்ளது. முதல் வாக்கியத்துக்கு தகுதி பெறும் வகையில் வாழ்ந்தால் நித்தியப் பேரின்ப வாழ்வை உரிமையாக்கி மகிழலாம், இரண்டாம் வாக்கியத்தின் நிலைக்கு தாழ்ந்தால் முடிவில்லாத தண்டனை பெற்று துன்பத்தில் துடிக்க வேண்டும்.

நமது மறுவாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்பதை நாமே தீர்மானிக்க முடியும் என்பதுதான். ஒரு விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றால் அதற்கான பரிசு பெற்று மகிழ்ச்சி அடைகிறோம். அந்த பரிசைப் பெற முடியாத நிலையில் நாம் வேதனையில் துடிக்கிறோம். இத்தகைய ஒரு மகிழ்ச்சியும் வேதனையுமே நமது மறுவாழ்வில் கிடைக்கும். போட்டிக்கு சில விதிமுறைகள் உள்ளது போன்று, நமது வாழ்வுக்கும் கடவுள் சில விதிமுறைகளைத் தந்துள்ளார். அவற்றைப் பின்பற்றி வாழ்ந்தால் நாமும் வெற்றி வாகை சூடி நித்திய வாழ்வைப் பரிசாகப் பெற்று மகிழலாம். "ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானது போல கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர். கிறிஸ்துவின் வருகையின் போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர். மனித இயல்பு கொண்ட உடலாய் விதைக்கப்படுவது ஆவிக்குரிய உடலாய் உயிர் பெற்று எழுகிறது. அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும்" (1கொரி.15: 22,23,44,53) என்று திருத்தூதர் பவுல் எடுத்துரைக்கிறார். ஆகவே, நமது உடலின் உயிர்ப்பும் மறுவாழ்வும் உண்மையானவை என்பதை உணர்ந்து அதற்கேற்ப நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வோம்.

நம்பிக்கை அறிக்கையில் சொல்வது போன்று, "உடலின் உயிர்ப்பையும் மறுவுலக வாழ்வையும்" நாம் நம்புகிறோம் என்றால் அது நமது செயல்களில் வெளிப்பட வேண்டும். இவ்வுலகில் வாழும் பாவிகள் மனந்திரும்பவும், தூய்மைபெறும் நிலையிலுள்ள ஆன்மாக்கள் விண்ணகம் சேரவும் கடவுளை மன்றாடுவது கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமை. கடவுளின் திட்டத்தை நமது வாழ்வில் செயல்படுத்தி, விண்ணகப் புனிதர்களோடு மாட்சிபெற முயல்வதே ஒவ்வொரு கிறிஸ்தவரின் இலக்கு. கடவுளுக்கு ஏற்றவர்களாக வாழ்ந்து, இறந்து, மீண்டும் உயிர்த்தெழும் பொழுது மறுவாழ்வில் பேரின்பம் உறுதியாகும். ஒவ்வொரு நவம்பர் மாதமும் இறந்துபோன நமது அன்பர்களை மட்டுமின்றி, நமது இறப்பைக் குறித்தும் சிந்திக்க அழைப்பு விடுக்கிறது. இவ்வுலகின் ஆடம்பரம், கேளிக்கை போன்றவற்றில் நம் கவனத்தை செலுத்தினால் நமது மறுவாழ்வு மகிழ்ச்சியாக இருக்காது. ஏழை லாசரைக் கண்டு கொள்ளாமல் வாழ்ந்த

பணக்காரனைப் போன்று இருந்தால், நாமும் நரக நெருப்பில் தவிக்க வேண்டியது இருக்கும். நம்மைச் சுற்றியுள்ள மக்களின் நலனில் அக்கறைக் கொண்டு வாழ்ந்தால் விண்ணகப் பேரின்பத்தை நாம் உரிமையாக்கி மகிழலாம். ஆகவே, மரணத்துக்கு பின்னும் தொடரும் வாழ்வுக்கு நம்மைத் தயாரிப்போம்.

## புனித ஆர்த்திமெதே சாத்தி - வாழ்வு தரும் பாடம்

**திரு. ஜான் அலெக்ஸ்**

**தொன் போஸ்கோவின் சலேசிய வாழ்க்கைக்கு ஒரு சவால் :** ஆர்த்திமெதே சாத்தி அவர்கள் இத்தாலியில் பிறந்தவர், பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வளர ஆரம்பித்தவர், ஒரு கட்டத்தில் அவர் தனது பள்ளிப்படிப்பையே நிறுத்தி விட்டுக் குழந்தைத் தொழிலாளியாகப் பணியாற்ற வேண்டியதாயிற்று. பிழைப்பிற்காக தன் பெரியப்பாவின் அழைப்பை ஏற்று அர்ஜென்டீனாவிற்கு சாத்தியின் குடும்பம் குடியேறியது. அப்போது ஆர்த்திமெதேக்கு 17வயது. ஒரு சிறிய கடையை வைத்து அதில் அவரது தந்தை பணியில் இருந்தார். ஒரு உணவு விடுதியில் வேலைக் கிடைத்தது அந்த வேலையை செய்தபோதும் சாத்திக்கு அந்த சூழ்நிலை ஒத்துவரவில்லை. ஆகவே அதைவிட்டு செங்கல் சூளைக்கு வேலையில் சேர்ந்தார்.

**வாழ்வின் துளிர் முளைக்கின்றது :** தினமும் காலையில் ஆலயத்தில் சென்று ஆண்டவரை வழிபடுவதில் என்றுமே அவர் தவறுவதே கிடையாது. பங்குத் தந்தை அருட்பணி சார்லஸ் என்பவரிடம் சாத்திக்கு நல்ல நெருக்கம் ஏற்பட்டது. சாத்தி கள்ளம் கபடமற்ற தெள்ளிய உள்ளம் கொண்டவர், இறை வழிபாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவர். குறிப்பாக அவர் ஒவ்வொருவரிடமும் அன்புடனும் நட்புடனும் பழகினார். கிடைக்கின்ற நேரத்தில் ஆலயத்திற்கு சென்று தேவையான பணிகளில் ஈடுபாடு காட்டியதால் அவருக்கு மன நிறைவும் மகிழ்வும் நிறைய கிடைத்தது.

**சலேசியராக ஓர் அழைப்பு :** பல சலேசியர்களைச் சந்திக்கும் வாய்ப்பு சாத்திக்கு கிடைக்கவே அதோடு தொன் போஸ்கோவின் வாழ்வை புரிந்துகொள்ள அவரது வரலாற்றினை வாசிக்க தொடங்கினார் சாத்தி. தொன் போஸ்கோவின் எளிமையான இனிமையான வாழ்வு இவரை ஈர்த்தது. நாட்கள் செல்ல அருட்பணி சார்லஸ், சாத்தியின் உன்னதப் பண்புகளை உள்ளூர உணர்ந்ததால் சாத்தியை துறவற வாழ்வுக்கு அழைப்பு விடுத்தார். சாத்தி ஆர்வம் பொங்கப் பணிவோடு செவிசாய்த்தார். பெற்றோரும் கடவுளுடைய திட்டம் இதுதான் என்று இருக்கும்போது அவ்வாறே நடக்கட்டும் எனக் கூறி ஆசி வழங்கி அனுப்பினார். 20 வயதில் சாத்தி இறைவன் தன் மீது கொண்ட கருணைக்காக நன்றியாக, பெர்னால் குருமடத்திற்குச் சென்றார்.

**கடைநிலையில் சாத்தி :** குரு மடத்தில் பலரும் இவரைவிட அதிகம் படித்தவர்களாகவும் வயதில் இளையவர்களாகவும் இருந்ததைப் பார்க்கின்றார் சாத்தி. இவரோ 10 வருடங்களுக்கு முன்பே படிப்பை நிறுத்தி விட்டவர். மீண்டும் தொடக்கக் கல்வியோடு மற்ற பாடங்களும் லத்தீன் மொழியில் பயில வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆனால் தன் ஆளுமை வளர்ச்சியின் மூலம் அந்த இல்லத்திலுள்ள பல பொறுப்புக்கும் அவருடைய கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்டன. இதுவே சாத்திக்கு கிடைத்த மாபெறும் அங்கீகாரம். தாழ்வு மனப்பான்மையோடு மடத்தினுள் சென்றவருக்கு இது புதிய எழுச்சியை கொடுத்தது. இறை அழைத்தலை முழுவதுமாக உணர்ந்தார், மகிழ்ச்சியோடு அதை ஏற்று வாழ்வதற்கு தயாரானார். இரண்டே ஆண்டுகளில் தனக்குக் கொடுத்திருந்த எல்லாப் பணிகளையும் திறம்படச் செய்து முடித்தார். இல்ல குருமார்கள் அனைவரும் சாத்தியை கண்டு மகிழ்ந்து துறவு வாழ்வின் தொடக்க நிலைக்கு தயாராகுமாறு கூறினர்.

**தியாக அர்ப்பணம் :** இளங்குருவானவர் ஒருவர் காச நோயினால் மிகவும் துன்புற்றிருந்தார். அவரை பராமரிக்க சாத்தி கேட்டுக்கொள்ளப்பட்டார். இறைவனின் சித்தம் இதுவென என்பதை உணர்ந்த சாத்தி அவரைக் கண்களுக்குள் வைத்து பராமரித்துவந்தார். அதன் விளைவாக அவருக்கும் அந்நோய் பரவியது. அந்நாட்களில் இந்நோய் ஒரு கொடிய தொற்று நோயாகக் கருதப்பட்டதால் குருவானவராகத் திருநிலைப் படுத்தப்படுவது தடை செய்யப்பட்டது. குருமடத்தின் இல்லத்தந்தை இதனைச் சாத்தியிடம் சொன்னபோது அதிர்ச்சிக்குள்ளானாலும் தொடர்ந்து செபிக்கலானார். மறுநாள் காலை அவருடன் பயின்றவர்கள் துறவு ஆடையை பெற்றுக்கொள்ளும் சடங்கு நடந்தது. ஆனால் சாத்தியோ படுக்கையில் இருந்தார். அவரது நெடுங்கால கனவு ஏமாற்றமாக மாறியதே என்ற வேதனை ஒருபுறம் வாட்டியது. தன் வாழ்வில் விழுந்த மிகப்பெரிய பேரிடியாக இதனை உணர்ந்தார். பலரும் அவரை இழிவாகப் பேசினர், ஆனால் சாத்தி அனைத்தையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார்.

**சகாய அன்னையிடம் வாக்குறுதி :** மருத்துவராக அருட்பணி கரேனோ, சாத்தியின் உடல்நிலையை பரிசோதித்தார். அவர் சாத்தியை ஆலயத்திற்குள் அழைத்துச் சென்று தேவ அன்னையின் பீடத்தின் முன் முழந்தாள் படியிட செய்து, "நான் முழு குணமடைந்தால், வாழ்நாளெல்லாம் ஏழை நோயாளிகளுக்காக என் வாழ்வை அர்ப்பணிப்பேன்" என வாக்குறுதிக் கொடுக்க பணித்தார். சாத்தியும் அவ்வாரே மகிழ்வோடு வாக்குறுதிக் கொடுத்தார். மருத்துவர்களும் சலேசிய கன்னியர்களும் சாத்தியை பரிவுடன் கவனித்தனர். கரேனோவின் வாக்கு உண்மையானது. மரியாளின் உதவியால் நலம்பெற்றார் சாத்தி. பிறகு தன் முதல் வார்த்தைப்பாட்டினை 1908டிலும் நித்திய வார்த்தைப்பாட்டினை 1911லும் எடுத்தார். தேவ அன்னைக்கு கொடுத்த வாக்குறுதிப்படி நோயாளிகளைக்

கவனிப்பதற்காகத் தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கினார். 1913ல் கரேனோ மறைவுக்குப் பின் மருத்துவமனையின் முழுப்பொறுப்பினையும் சாத்தி எடுத்துக்கொண்டு சிறப்பாக பணியாற்றி வந்தார். அதிகாலை முதல் இரவு 11 வரை எப்போதுமே நோயாளிகளின் அழைப்பை ஏற்றுப் பணிவிடை செய்துவந்தார்.

**இறுதியாக :** மறைபோதகர்களைத் தொன் போஸ்கோ வெளிநாடுகளுக்கு அனுப்பியபோது, "இளையோர், நோயுற்றோர், ஏழை எளியவர்களுக்கு பணி செய்ய வேண்டும், கடவுளின் ஆசீரும் நல்லவர்களின் உதவியும் உங்களுக்குக் கிடைக்கும்" என்று கூறி அனுப்பினார். இவ்வார்த்தைகளைச் சாத்தி தன்னுடைய உள்ளத்தில் ஏற்று நோயுற்றோரை கவனிப்பதே தன்னுடைய ஆன்மீகப் பயணம் என்று தன் இறுதி மூச்சு வரை கடைப்பிடித்தார். இறுதி நாட்களில் எந்தவித அச்சமோ கலக்கமோ இன்றி, தன் மரணச்சான்றிதழை தானே எழுதிவைத்த மாமனிதர் சாத்தி. திருப்பலியும் செபமாலையும் அவர் விரும்பிய பக்தியின் வெளிப்பாடுகள். "பணிவிடை பெற அல்ல பணிவிடை புரிவதற்கே" பிறந்த சாத்தியின் மறைவு, சலேசிய வாழ்க்கைக்கு ஒரு சவால். 2002ல் திருஅவை இவரை அருளாளர் எனவும், 2022ல் புனித நிலைக்கும் உயர்த்தியது.

## இயேசுவே உலகின் அரசர்

திரு. பி. விக்டர்

இறைமகன் இயேசு இவ்வுலகில் மனிதனாய் பிறந்து வாழ்ந்த காலம் என்பது, இஸ்ரயேல் நாடு உரோமைப் பேரரசர் சீசரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம், அதிகாரத்திற்கும் அடக்குமுறைக்கும் பஞ்சமில்லாத காலம். ஒரு பக்கம் சீசரின் அதிகாரவர்க்கம் பல்வேறு சட்டங்களாலும் வரிகளாலும் மக்களைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்த அதே வேளையில் மறுபக்கம் யூத மதத் தலைவர்களும், தலைமைக் குருக்கள், பரிசேயர்கள், சதுசேயர்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோர் அடங்கிய இந்த குழு மக்களை வேறுவிதத்தில் அதாவது மோசேயின் சட்டங்களைக் காட்டி மக்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தது. இதன் காரணமாக இயேசு மக்களுக்கு நன்மை செய்த பல சந்தர்ப்பங்களில் அவரிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டு வந்தனர். உதாரணமாக 38 ஆண்டுகள் முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டு நடக்க இயலாதவராக எருசலேமில் ஆட்டுவாயில் அருகிலுள்ள பெத்சாய்தா குலக்கரையில் படுத்திருந்த நபரைப் பார்த்து "எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று இயேசு கூற, அவரும் அவ்வாறே குணமாகி எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தார்.

அன்று அது ஓய்வு நாள், எனவே யூத தலைவர்கள் அவரிடம் கேள்வி கேட்டு துளைத்தனர். அவரைக் குணமாக்கி நடக்கச் சொன்னது இயேசு என்று தெரிந்தவுடன், ஓய்வு நாளில் செய்யத் தகாததை செய்யத்

தூண்டியதற்காக இயேசுவைக் கொல்ல வகைத் தேடினர். இயேசு மோசேயின் சட்டங்களை மதிக்காதவர் என்று மக்களை நம்பவைக்க முயன்றனர். இயேசு பாவங்களை நேசிக்கிறார், அவர்களது வீடுகளுக்குச் சென்று உணவருந்துகிறார் என்பதனாலேயே அவரைப் "பாவிகளுக்கு நண்பன்" என்று இழிவாகப் பேசினர். இவையெல்லாம் அவர்களது அதிகார, ஆணவச் செயல்களுக்கு ஒருசில உதாரணங்களே. இத்தகைய பொல்லாத சூழலில் வாழ்ந்து வந்த மக்கள், நம்மை மீட்க "ஒரு மெசியா" வருவார் என உறுதியாக நம்பினர். இருக்கிற உரோமைப் பேரரசை அழித்துவிட்டு நமக்கு விடுதலை பெற்றுத்தருவார் என்று "யாவே" கடவுளை நோக்கி விண்ணப்பித்து வந்தனர், அந்த மெசியாவுக்காகக் காத்திருந்தனர்.

இறைவாக்கினர்கள் "இயேசு இவ்வுலகிற்கு வருவார், இவ்வுலகை அரசாள்வார்" என்று இறைவாக்குரைத்தனர். "எப்பிராத்தா எனப்படும் பெத்தலகேமே, இஸ்ரயேலை ஆளப் போகிறவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்" (மீகா. 5:2) என்கிற இறைவாக்கு மக்களுக்கு நம்பிக்கையைத் தந்து வந்தது. ஒரு எதிர்நோக்கோடு வாழ வைத்தது. தாவீதின் மரபிலிருந்தும் அவர் குடியிருந்த "பெத்லகேம்" என்னும் ஊரிலிருந்து "மெசியா வருவார் என்று எங்கள் மறைநூல் கூறுகிறது (யோவா. 7:42) என்று இயேசு பிறந்தது பெத்லகேம் என்று தெரியாமலேயே அவரிடமே இவ்வாறு கூறினர். இயேசு பிறப்பதற்கு முன்பே அவர் "அரசனாகத்தான்" பிறப்பார் என்று இறைவாக்கினர் முன் குறிப்பிட்டிருந்தனர். இயேசுவின் பிறப்பு நிகழ்வின்போது கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் எருசலேம் நகருக்கு வந்து ஏரோது அரசனிடம் "யூதர்களின் அரசனாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" (மத்.2:2) என்று கேட்டு, இயேசு யூதர்களின் அரசனாகப் பிறந்துள்ளார், அதுவும் அரசனாகவே பிறந்துள்ளார்" என்பதை வெளிப்படுத்துகின்றனர். இயேசுவின் இறப்பின்போதும் அவரது அரசத்தன்மையை நாம் அறியலாம்.

இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்ல உத்தரவிட்ட "பிலாத்து" நாசரேத்தூர் இயேசு, "யூதர்களின் அரசன்" என்று ஒரு பலகையில் எழுதி இயேசு அறையப்பட்ட சிலுவையில் அவரது தலைக்குமேல் வைக்கச் செய்தான். "இயேசு அரசன்" என்பதை பிலாத்துவைக் கொண்டு கடவுள் உலகிற்கு அறியச் செய்கின்றார். இயேசுவின் அரசு இவ்வுலகைச் சார்ந்தது அல்ல என்பதை இயேசுவின் வாக்குமூலத்திலிருந்து பிலாத்து அறிந்ததாலேயே இவ்வாறு எழுதச் செய்தான். மேற்கூறிய தகவல்களிலிருந்து இயேசு பிறந்ததும் அரசனாக, இறந்ததும் அரசனாக என்பது சந்தேகமின்றி தெளிவாக விளங்குகிறது. அதுமட்டுமல்ல அவர் "தாவீது" என்கிற அரசனின் வழித்தோன்றலாக அரச பரம்பரையில் வந்தவர் என்பதை மத்தேயு நற்செய்தியாளர் தெளிவாக விளக்குகிறார். "தாவீதின் மகனும் ஆபிரகாமின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல்" மத்தேயு நற்செய்தியாளர் தனது நற்செய்தியின் தொடக்கத்திலேயே இயேசு "அரச பரம்பரை" என்பதை தெளிவுப்படுத்துகிறார் (மத். 1:1).

இஸ்ரயேலரின் அரசனாக வந்தவர் எவ்வாறு உலகின் அரசனாக மாறினார்? இறைமகன் இயேசு கிறிஸ்துவை உலகம் அனைத்திற்கும் அரசனாக ஏற்படுத்துவதுதான் தந்தையாம் கடவுளின் விருப்பமும் திட்டமும். அதனால்தான் "அவர்மீது நம்பிக்கைக் கொள்ளும் எவரும், அவரை ஏற்றுக்கொண்ட எவரும் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை வழங்கினார். இந்த உரிமை யூதர்களுக்கு மட்டுமல்ல, மாறாக இயேசுவை ஏற்றுக்கொள்ளும் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்ட உரிமை. இந்த இயேசுவை நம்பும் எவரும் அழியாமல் நிலைவாழ்வைப் பெரும்பொருட்டு அந்த ஒரே மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். இங்கு கூட யூதர்கள் அல்லது இஸ்ரயேல் என்று ஒரு குறிப்பிட்ட இனத்தைக் குறிப்பிடாமல் உலகிலுள்ள எல்லா மக்களையும் உள்ளடக்கி, எல்லா மக்களுக்காகவும் தான் இயேசு இவ்வுலகிற்கு வந்தார் என்பது தெளிவாகிறது. மேலும் "இயேசு என்னும் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிட வேண்டும்" என்று கூறி தந்தையாம் கடவுள் இயேசுவை மூவுலகிற்கும் அரசராக உயர்த்தியுள்ளதையும் காண்கிறோம் (பிலி. 2: 9-19).

இயேசு உலகிற்கு வந்தபோதே யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஏனெனில் அன்றைய மக்கள் எதிர்நோக்கிக் காத்திருந்தது. சமுதாய விடுதலையும், உரோமை அதிகாரத்திலிருந்து விடுதலையும், அடக்கு முறைகளிலிருந்து விடுதலையும். ஆனால் இயேசு கொண்டு வந்ததோ "ஆன்மீக விடுதலையை" அதன் காரணமாக இயேசு புறக்கணிக்கப்பட்டார், கொலை செய்யப்பட்டார். அதனால் இயேசுவைக் குறித்த நம்பிக்கை இஸ்ரலேயரைவிட்டு உலக மக்களுக்குக்கொண்டு செல்லப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் கடவுளின் அரசாட்சியில் பங்குபெறலாயினர். இங்குதான் இயேசு அரசராக நீதியுள்ள நடுவராக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஒரு குறிப்பிட்ட இனத்திற்கென்று அல்லாமல் உலகிற்கே அரசராக மாறினார். தந்தையாம் கடவுளின் திட்டமும் இதனால் நிறைவேறியது.

இயேசுவே உலகிற்கு அரசனாய் இருப்பதற்கான தகுதிகள்: ஒரு அரசனுக்குரிய முக்கியமான தகுதிகளில் முதன்மையானது அவர் வீரமிக்கவராக இருக்க வேண்டும். அப்போதுதான் தன் மக்களை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க முடியும். அடுத்து முக்கியமானது தனது நாட்டு மக்கள்மீது அன்புள்ளவராக இருக்க வேண்டும், அவர்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்கிறவராக இருக்க வேண்டும், நீதிவழுவாத நேர்மை தவறாதவராக, பாரபட்சம் பாராமல் நீதி வழங்குபவராக இருக்க வேண்டும். இவையே மிக முக்கியமானவையாகும். கடவுள் அன்புள்ளவர், அவர் அன்பாகவே இருக்கிறார் (1யோவா 4: 16). இயேசு இந்த அன்புக் கடவுளின் மகனாக இருக்கிறார். "இவரே என் அன்பார்ந்த மகன்" என்று கடவுள் இயேசுவை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். "நான் உங்களை

அன்பு செய்ததுபோல நீங்களும் ஒருவர் மற்றவரை அன்பு செய்யுங்கள்" என்று கூறி நம்மை அன்பு செய்தவர்தான் உலகின் அரசர் இயேசு.

நாம் பாவிகளாய் இருந்தபோதே நமக்காக சிலுவையில் மரித்தார் இயேசு. உலகிற்கு அரசரான இயேசு வீரமிக்கவர். மனித குலத்திற்கே எதிராகச் செயல்பட்டு மனிதரை அடிமைப்படுத்தி வைத்திருந்த பிசாசிடமிருந்து நம்மை விடுவித்தவர் இயேசு. நமக்கு எதிரான விதிகள் பல கொண்ட கடன் பத்திரத்தை வைத்து நம்மையெல்லாம் அடிமைப்படுத்தி வைத்திருந்த பிசாசிடமிருந்து அந்தக் கடன்பத்திரத்தை பிடுங்கியெடுத்து அதைக் கிழித்தெரிந்து பிசாசுக்கு நம்மேல் அதிகாரம் இல்லாமல் செய்து, நம்மைப் பிசாசின் பிடியிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெற்றுத்தந்தவர் இயேசு. இயேசுவின் சிலுவை மரணம் நமக்கு இந்த விடுதலையைப் பெற்றுத் தந்துள்ளது (கொலோ. 2:14-15).

இவர் நம்மைப் பாவத்திலிருந்து விடுவித்தார், சாபங்களிலிருந்து விடுதலை பெற்றுத்தந்தார், மரண பயத்திலிருந்து விடுதலை பெற்றுத்தந்தார், வியாதிகளிலிருந்து விடுதலை பெற்றுத் தந்தார். சமாதானக் குறைவிலிருந்தும் விடுதலை பெற்றுத் தந்தார். ஆன்மாக்கள்மீது தாகம் கொண்டு அவற்றைத் தேடி அலைகிறவராக காணப்படுகிறார். பசியால் வாடும் மக்களைப்பார்த்து அவர்களது பசிதீர்க்கும் அட்சயப் பாத்திரமாக மாறினார். ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தார். கொந்தளித்த காற்றையும் கடலையும் அடக்கி, இயற்கையின்மீது தமக்கிருந்த அதிகாரத்தை வெளிப்படுத்தினார். கையும் மெய்யுமாய் பிடிபட்ட விபச்சாரப் பெண்ணுக்கு மனமிரங்கி மன்னிப்பளித்து தாம் இரக்கமுடையவர் என்பதை வெளிப்படுத்தினார்.

கழுதையின்மீது பயணம் செய்து எருசலேமில் தான் அரசன் என்பதை வெளிச்சம் போட்டு காண்பித்தார். தன்னுடைய சீடர்களின் பாதங்களைக் கழுவி தான் அரசனாக இருந்தாலும் மக்களுக்குப் பணிசெய்வது தனது கடமை என்பதை வெளிப்படுத்தி நமக்குப் பாடம் கற்பித்தார். உலகின் அரசர் இயேசு நமக்காகத் தந்தையாம் கடவுளிடம் பரிந்து பேசுகிறவராக இருக்கின்றார் (உரோ. 8: 34). மேலும் நமக்காகத் துன்பங்களை ஏற்றுக்கொள்பவராக வாழ்ந்து, இயேசுவே உலகின் அரசர் என்பதை எண்பித்துக் காட்டியுள்ளார். இறுதியாக உலகிற்கே அரசரான இயேசு உலகின் இறுதியில் நம்மை நடுத்தீர்ப்பு நாளில் மீட்பதற்காக மீண்டும் வருவார். நீதி இருக்கையின்மீது அமர்ந்து அவரவர் செய்த செயல்களுக்கேற்ப நீதி வழங்குவார். நீதி வழங்குவது அரசனின் மிக முக்கியமான பணிகளில் ஒன்று. அதை இயேசு செய்து நமக்கு நீதி வழங்குவார். உலகிற்கே அரசரான இயேசுவிடம் நம்மை ஒப்படைப்போம். அவரது ஆளுகைக்கு நம்மை விட்டுக்கொடுப்போம் அவருடையவர்களாய் வாழ்ந்து, அவரை மாட்சிமைப்படுத்துவோம்.

# திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ், ச.ச.

## ஆயர் மாமன்றத்தில் தேர்வு உறுப்பினர்களின் விவரம்

தொகுப்பு அறிக்கைக்கான ஆணைய உறுப்பினர்களின் தேர்தல் மற்றும் தகவல் ஆணையத்தின் உறுப்பினர்களுக்கான வாக்கெடுப்பு நடைபெற்றது. தொகுப்பு அறிக்கைக்கான ஆணையம், குறிப்பெடுக்கும் பணி மட்டுமல்லாமல், தொகுப்பு அறிக்கையின் வரைவைத் தயாரிப்பதை மேற்பார்வை செய்தல், திருத்துதல் மற்றும் ஒப்புதல் அளித்தல் ஆகிய செயல்பாடுகளை மேற்கொள்ளும் என்றும், தகவல் ஆணைக்குழு, தகவல்தொடர்பு துறைக்கான பணியாளர்களுடன் தகவல் தொடர்புகளை கவனித்து ஆணையத்திற்கு உதவும் என்றும் அச்செய்தி குறிப்பிட்டுள்ளது. மேலும், தேர்தல்கள் ஒழுங்குமுறைகளில் சுட்டிக்காட்டப்பட்ட நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளின்படி நடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. தொகுப்பு அறிக்கை ஆணையானது, தலைவர் கார்டினல் ஜன்கிளாட் ஹோலெரிச், இரு அதிகாரப்பூர்வ உறுப்பினர்களாக ஆயர் பேரவையின் தலைமைச் செயலகத்தின் இருவர், மலேசியாவைச் சேர்ந்த அருள்பணி கிளாரன்ஸ் சந்தனராஜ் தேவதாசன் உட்பட ஆயர்மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு உறுப்பினர்கள், மற்றும் திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட மூவரை உள்ளடக்கியதாகும்.

## காஸா மக்களுடன் திருத்தந்தையின் ஒருமைப்பாட்டுணர்வு

ஹமால் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலிய தாக்குதல்களில் மக்களின் நிலை என்ன என்பதைக் கண்டறிய திருத்தந்தை பிரான்சிஸிடமிருந்து இரண்டு தொலைப்பேசி அழைப்புகள் வந்துள்ளதாக வத்திக்கான் செய்திக்கு தெரிவித்துள்ளார் காஸா பங்கு தந்தை கேப்ரியேல் ரொமனெல்லி. காஸாவின் நிலமையை அறியவும், இப்போது தலத்திருஅவையில் அகதிகளாக இருக்கும் மக்களுக்கு தனது நெருக்கத்தைக் காட்டவும், திருத்தந்தை இந்த தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டதாக தெரிவித்தார். காஸா தலத்திருஅவையில் ஏறக்குறைய 150பேர் வீடுகளை இழந்துள்ளனர், என்றும் குண்டுவெடிப்புகளிலிருந்து பாதுகாப்பான இடத்தைத் தேடுகிறார்கள் என்றும், இந்தத் தாக்குதல்கள் காஸாவின் முழுப் பகுதியையும் பாதித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார் அருள்பணி ரொமனெல்லி.

## ஏழு கல்வியாளர்களுக்கு ஜோசப் ராட்ஸிங்கர் விருதுகள்

ஜோசப் இராட்ஸிங்கர் பெனடிக்ட் வத்திக்கான் அறக்கட்டளையின் 6வது அதாவது இந்த ஆண்டிற்கான விருது விழாவினை அக்டோபர் 17 அன்று நடத்தி, இதில் மனிதகுலத்தின் கேள்விகளுக்கும், உண்மையைத்

தேடுவதிலும் அதிக பங்களித்த 7 கல்வியாளர்கள் கௌரவிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டது. திருத்தந்தை 16ம் பெனடிக்ட்டால் முன் மொழியப்பட்ட, விரிவுப்படுத்தப்பட்ட பகுத்தறிவு வாதத்தை விளக்கும் அறிவியல் கட்டுரைகள் அல்லது கல்வித் திட்டங்களின் மூலம் ஆராய்ச்சி அல்லது கற்பித்தல் துறையில் தாக்கங்களை ஏற்படுத்திய பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் விருதுகளைப் பெறுபவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இராட்ஸிங்கர் அறக்கட்டளையின் தலைவர், இயேசுசபை அருள்பணி பெதரிகோ லொம்பார்தி, பிரான்சிஸ்கோ டி விட்டோரியா பல்கழைக்கழகத்தின் அதிபர் பேராசிரியர் டேனியல் சடா மற்றும் பேராசிரியர்கள் ஸ்தேபனோ ஜமாக்னி, மார்தா பெர்டோலாசோ, ரபேல் விகுன்யா மற்றும் சேவியர் பிரேதேஸ் ஆகியோர் உட்பட 15 நாடுகளிலிருந்து 63 பல்கழைக்கழகங்கள் 4 மொழிகளில் சமர்ப்பித்த ஆவணங்களை ஆய்வு செய்து, இந்த ஆண்டு விருதுக்கென ஏழு பேரை தேர்ந்தெடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவிற்கு வத்திக்கானின் விசுவாசக் கோட்பாட்டிற்கான துறையின் தலைவர் கர்தினால் லூயிஸ் பிரான்சிஸ்கோ லதாரியா பெரர் அவர்கள் தலைமை தாங்குவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. டர்ஹாம் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அன்னா ரோலண்ட்ஸூக்கு ஆராய்ச்சிப் பிரிவிற்கான விருதும், இதே பிரிவில் ஐடிஐ கத்தோலிக்க பல்கலைக்கழத்தில் அடிப்படை இறையியல் பேராசிரியரும், ஆக்ஸ்போர்டில் உள்ள பிளாக்ப்ரியர்ஸ் ஹாலில் ஆராய்ச்சியாளருமான சைமன் மரியா கோப்புக்கும், மற்றும் கற்பித்தல் பிரிவில், பல்கலைக்கழக தலைமைத்துவ கல்வி விருதுகள் பிரான்சிஸ்கோ டி விட்டோரியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் ஜூவான் செரானோ மற்றும் கரோலா டியாஸ்டி லோப்-டியாஸ் ஆகியோருக்கும் திருச்சிலுவை திருத்தந்தை பல்கலைக்கழகத்தின் அறிவியல் மற்றும் நம்பிக்கைக்கான இடைநிலை ஆவண மையத்தில் செயலில் உள்ள DISF கல்வி டிஜிட்டல் தளத்தின் இயக்குநர் மற்றும் ஒருங்கிணைப்பாளர், பேராசியர்கள் யூசெப் டர்னசெல்லா-நிட்டி, ஸ்தேபனோ ஒலிவியா ஆகியோருக்கும், இறையியல் பேராசிரியரான எலிசபெத் நியூமனுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட உள்ளதாக அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

## சுடர் வாசகர் போட்டி - 103

1. உல்மா குடும்பம்
2. அமல அன்னை, அலெக்சாண்டிரீனாவிடம்
3. கிறிஸ்தவ நம்பிக்கையில் முதிர்ச்சிப் பெற்று புனிதத்தை அடையவேண்டுமென்ற
4. 150
5. அருளாளர் அலெக்சாண்டிரீனா மரிய தா கோஸ்தா
6. அவர்கள் சொல்வார்கள், செயலில் காட்டமாட்டார்கள்"
7. அந்தியோக்கியாவின் 2வது ஆயரான
8. பேதுருவும், திருத்தூதர்களும்
9. அருளாளர் அகுஸ்தீன் தேவாரம்பரம்பில்
10. 1915 ஜூலை 16
11. சீமோன்
12. நற்செய்தியின்படி வாழ்வதாகும்
13. கடவுளைத் தேடுவதிலும் நற்செய்திக்கான ஆர்வத்திலும், இன்முக வரவேற்பிலும் எவ்வாறு உதவுவது என்பதை எடுத்துரைத்தார்
14. உழைப்பவர்களுக்கும் மனவுறுதியுடன் நம்பிக்கையோடு எதிர்நோக்கி காத்திருப்போருக்கும் நன்றி கூறி இறைவனிடம் வேண்டுகிறோம்
15. அருளாளர் அலெக்சாண்ட்ரீனா

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

R. Flora Mary, Tirupur

D. Kevin Jerry Rosario, Dindugul

Sr. Maria Teresa, Chennai

## சுடர் வாசகர் போட்டி 104

1. கர்தினால் லூயிஸ் பிரான்சிஸ்கோ லதாரியா பேரன் எந்த துறையின் தலைவர்?
2. "அவர்கள் வானதூதர்களைப் போன்று இருப்பார்கள்" திருவிவிலியத்தில் எங்குள்ளது? யார் கூறியது?
3. "ஒ" வடிவில் சிலுவையில் வைத்து அறைந்து கொல்லப்பட்ட புனிதர் யார்?
4. 117 பேருடன் மறைசாட்சியாக மரித்த புனிதர் யார்?
5. "புனிதராகும்வரை தான் சாகக் கூடாது" என்று செபித்தவர் யார்?
6. பேலாஜியுஸ், மனிகேயு, ரெஸ்போரியன் இந்த தப்பறைகளுக்கு சரியான விளக்கம் தந்த திருத்தந்தை யார்?
7. புனித சார்லஸ் பொரோமெயோவுக்கு புனிதர் பட்டம் வழங்கிய திருத்தந்தை யார்?
8. இறந்தோர்க்காக செபித்தல் பற்றி திருவிவிலியத்தில் எந்த நூலில் படிக்கின்றோம்?
9. "நான் குணமடைந்தால் வாழ்நாள் முழுவதும் ஏழை நோயாளிகளுக்கு என் வாழ்வை அர்ப்பணிப்பேன்" கூறியது யார்?
10. "மெசியாவைக் கண்டோம்" கூறியது யார்?
11. கிறிஸ்து அரசர் விழாவை ஏற்படுத்தியவர் யார்?
12. "பாவமில்லாமல் உற்பவித்த மரியாவை அளவுகடந்த மரியாதையோடு பார்க்கிறேன்" கூறியது யார்?
13. தன் மரணச் சான்றிதழை தானே எழுதிவைத்த புனிதர் யார்?
14. புனித பேதுரு, பவுல் தலைகள் வெட்டப்பட்டு வெள்ளிப் பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள ஆலயம் எது?
15. உச்சந்தலையில் வட்டம் போட்டு தன்னை அர்ப்பணித்தவர் யார்?


## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்:................................
முகவரி:................................
.....................................
.....................................
.....................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

திருவருகைக் கால முதல் ஞயிறு
புனித பிரான்சிஸ் சவேரியார்
அரு பிலிப்பு ரெனால்டி
திருவருகைக் கால இரண்டாம் ஞயிறு
குவாதலூப் நகர் புனித கன்னி மரியா
புனித லூசி
திருவருகைக் கால மூன்றாம் ஞயிறு
கான்டி நகர் புனித ஜான்
திருவருகைக் கால நான்காம் ஞயிறு
கிறிஸ்து பிறப்பு விழா காலை திருப்பலி
புனித ஸ்தேவான்
புனித யோவான்
புனித மாசில்லாக் குழந்தைகள்
திருக்குடும்பம் விழா

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

புதுவருட இரவு ஆராதனை
மீட்க வந்த மீட்பர்
அருளாளர் பிலிப் ரெனால்டி வாழ்வு தரும் பாடம்
திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி"பதில்களை நவம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
(சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# நவம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | பு | **புனிதர் அனைவரின் பெருவிழா** | **I.** தி.வெ. 7: 2-4,9-14<br>**II.** பிலிப். 3: 1-3 | மத். 5: 1-12 |
| 2 | வி | இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவு | **I.** சாஞா. 3: 1-9<br>**II.** உரோ. 5:5-11 (அ) 6: 3-9 | யோவா 6: 37-40 |
| 3 | வெ | புனித மார்ட்டின் தெ போரஸ் | உரோ. 9: 1-5 | லூக். 14: 1-6 |
| 4 | ச | புனித சார்லஸ் பொரோமெயோ | உரோ. 11: 1-2,11-12,25-29 | லூக். 14: 1,7-11 |
| 5 | **ஞா** | **பொதுக்காலம் 31ம் ஞாயிறு** | **I.** மலா. 1: 14-2:1-2,8-10<br>**II.** 1தெச. 2: 7-9,13 | மத். 23: 1-12 |
| 6 | தி | | உரோ. 11: 29-36 | லூக். 14: 12-14 |
| 7 | செ | | உரோ. 12: 5-16 | லூக். 14: 15-24 |
| 8 | பு | | உரோ. 13: 8-10 | லூக். 14: 25-33 |
| 9 | வி | **இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா** | எசே. 47: 1-2,8-9,12<br>1கொரி. 3: 9-11,16-17 | யோவா. 2: 13-22 |
| 10 | வெ | புனித பெரிய லியோ | உரோ. 15: 14-21 | லூக். 16: 1-8 |
| 11 | ச | தூர் நகர் புனித மார்ட்டின் | உரோ. 16: 3-9, 16, 22-27 | லூக். 16: 9-15 |
| 12 | **ஞா** | **பொதுக்காலம் 32ம் ஞாயிறு** | **I.** சா.ஞா. 6: 12-16<br>**II.** 1தெச. 4: 13-18 | மத். 25: 1-13 |
| 13 | தி | | சா.ஞா. 1: 1-7 | லூக். 17: 1-6 |
| 14 | செ | | சா.ஞா. 2: 23-3:9 | லூக். 17: 11-19 |
| 15 | பு | புனித பெரிய ஆல்பர்ட் | சா.ஞா. 6: 1-11 | லூக். 17: 11-19 |
| 16 | வி | புனித கெர்ட்ரூட் | சா.ஞா. 7: 22-8:1 | லூக். 17: 20-25 |
| 17 | வெ | அங்கேரி நாட்டுப் புனித எலிசபெத் | சா.ஞா. 13: 1-9 | லூக். 17: 26-37 |
| 18 | ச | | சா.ஞா. 18: 14-16, 19: 6-9 | லூக். 18: 1-8 |
| 19 | **ஞா** | **பொதுக்காலம் 33ம் ஞாயிறு** | **I.** நீமொ.31:10-13,19-20, 30-31<br>**II.** 1தெச. 5: 1-6 | மத். 25: 14-30 |
| 20 | தி | | 1மக்.1:10-15,41-43,54-57, 62-64 | லூக். 19: 1-10 |
| 21 | செ | புனித கன்னி மரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் | 2மக். 6: 18-31 | லூக். 19: 11-28 |
| 22 | பு | புனித செசிலியா | 2மக். 7:1, 20-31 | லூக். 19: 11-28 |
| 23 | வி | புனித முதலாம் கிளமெண்ட் & கொலும்பன் | 1மக். 2: 15-29 | லூக். 19: 41-44 |
| 24 | வெ | புனிதர்கள் ஆன்ட்ரூ டுங் லாக் | 1மக். 4: 36-37, 52-59 | லூக். 19: 45-48 |
| 25 | ச | அலெக்சாந்திரியா நகர் புனித கத்தரின் | 1மக். 6: 1-13 | லூக். 20: 27-40 |
| 26 | **ஞா** | **கிறிஸ்து அரசர் பெருவிழா** | **I.** எசே. 34: 11-12,15-17<br>**II.** 1கொரி. 15: 20-26,28 | மத். 25: 31-46 |
| 27 | தி | | தானி. 1: 1-6, 8-20 | லூக். 21: 1-4 |
| 28 | செ | | தானி. 2: 31-45 | லூக். 21: 5-11 |
| 29 | பு | | தானி.5:1-6,13-14,16-17,23-38 | லூக். 21: 12-19 |
| 30 | வி | புனித அந்திரேயா | உரோ. 10: 9-18 | மத். 4: 18-22 |